Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 27 • 24.01.2016

வடக்கின் கட்டடக்கலையில்
பாரிய புரட்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கும்
HARI
ENGINEERS & CONTRACTORS
+94 77 2830694

# வைத்தியர்கள் செய்வதற்கு பெயரா சேவை?

ஒரு நிமிடம் நில்லுங்கள் மருத்துவ மாணவர்களே!

'சேவையை விலைபேசி விற்காதே' என சுலோக அட்டை தாங்கிய மாணவர்கள் எதற்காக போராடுகிறார்கள்? மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு மட்டும் எதிராகவா? மருத்துவம் தனியார் மயப்படுவது அவர்களிற்கு தெரியவில்லையா? அல்லது, எங்களை மட்டும் உழைக்கவிடு என்ற மனநிலையா? மருத்துவ மாணவர்களே, ஒரு நிமிடம் நின்று உங்கள் மனச்சாட்சிகளுடன் பேசுங்கள்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்










கள்ளுத்தவறணையால் கதிகலங்கும் ஊர் 15
வெளிநாட்டு பார்சல் 17
தண்ணீருக்கு வெளியில் வந்த முதலைகள் 20

உள்ளே...

# ஊடக மாபியாக்கள்

ஊடகங்களினால் என்ன செய்ய முடியும்?

இப்படியொரு கேள்வியை ஊடகக்காரர்களிடம் கேட்டால், 'எதுவும் செய்ய முடியும்' என்பார்கள். இந்தக் கேள்வியையும், பதிலையும் கடந்துதான் அவர்கள் ஊடகப்பயிற்சிநெறியையே முடித்திருப்பார்கள்.

ஊடகங்களினால் எதுவும் செய்ய முடியுமென்பதில் குறிப்பிடத் தக்களவு உண்மை உள்ளதுதான். எதுவும் என்பதன் அர்த்தம் உண்மையின், நீதியின், பொறுப்புணர்வின், மக்கள் நலனின் பாற்பட்ட பொறுப்புணர்வின் அடிப்படையில் செயற்படுவதை குறிக்கும். அதனால்த்தான் ஊடகங்களை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றார்கள்.

எனினும், ஊடகங்கள் அனைத்தும் தமது பொறுப்புணர்வை பேணுவதில்லை. ஏதோ ஒரு சமயத்தில் ஏதோ ஒரு அளவில் மீறுகின்றன. காரணம் ஊடகங்களிற்கு ஒரு முதலாளி இருக்கிறார் அல்லவா!

ஈழத்தமிழர்களின் ஊடகங்கள் பெருமளவில் ஊடகத்திற்கு தேவையான அடிப்படைகளை பேணுவதில்லை. ஊடக அறத்தை கைக்கொள்வதில்லையெனில் சட்டரீதியான சிக்கல்களை அவர்கள் சந்தித்திருப்பார்களே என யாராவது பதில் கேள்வி கேட்கலாம். ஊடக அறம் எனப்படுவது விஞ்ஞானபூர்வமாக செயற்படுவதல்ல. சட்டரீதியான சிக்கல்களிலிருந்து தப்பிக்க கைக்கொள்ளும் விஞ் ஞானபூர்வ நடவடிக்கைகள் அனைத்தும் ஊடக அறத்திற்குள் அடங்குவதில்லை. ஊடக அறமெனப்படுவது அதற்கும் மேலானது.

இணைய ஊடகங்களின் வளர்ச்சியும், சமூக வலைத்தளங்களின் பரவலும் செய்திகளை பல்பரிமாணமடைய வைத்துள்ளன. அதன் எல்லைகளை தகர்த்துள்ளன. இந்த உலகளாவிய மாற்றத்தை ஈழத்தமிழர்கள் எப்படி உள்வாங்கியுள்ளனர்?

இதுதான் விவாதத்திற்கும், சிந்தனைக்குமுரிய வினா.

இணைய ஊடகங்கள் செய்திகளின் எல்லைகளை தகர்த்துவிட்டன. இன,மத,மொழி, பிரதேச, அதிகார எல்லைகளை கடந்து செய்திகளை விஸ்பரூபம் கொள்ள வைத்துள்ளன இணைய ஊடகங்கள். இதற்கு நல்ல உதாணரம் இரண்டு. ஒன்று ஹிருணிகாவின் உதவியாளர்கள் தொடர்புபட்ட ஆள்கடத்தலொன்று. சிங்கள ஊடகங்கள் அத்தனை தகவல்களையும் துல்லியமாக அறிக்கையிட்டன. அதேபோல, சில மாதங்களின் முன் தமிழ் இணையமொன்றும் பரபரப்பு செய்தியிட்டது. ஒரு கோயில் அர்ச்சகரின் மனைவி கள்ளக்காதலனுடன் ஓடிவிட்டார் என்று.

தொழில்நுட்பத்தையும், ஊடகத்தையும் தமிழர்கள் எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் இது. ஊடகத்தை எப்படியும் கையாளலாம் என தொழில்நுட்பம் தெரிந் தவர்கள் அதனை இயக்கத் தொடங்கும்போது ஏற்படும் விளைவுகள் விபரீதமானவை. வடக்கில் சில இணையத்தளங்கள் ஊடக மாபியாக்களாக உருவெடுத்திருப்பது உதாரணம்.

இணையத்தளங்களை பயன்படுத்தி கப்பம் பெறல், பெண்களை துஷ்பிரயோகம் செய்தல், எதிராளிகளை பகைதீர்த்தல் என பல அசிங்கங்கள் நடப்பதாக அண்மைய செய்திகள் கூறுகின்றன.

செய்தி உலகத்தில் இணையத்தளங்கள் கடைக்குட்டிகள். அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்றால், பாரம்பரிய செய்தி ஊடகங்களின் நிலையும் மகா மோசமாகவே உள்ளது.

வடக்கின் பத்திரிகை உலகம் பெருமளவு அரசியல்முகாம்கள் சார்ந்தது. அண்மைய காலத்தில் வடக்கில் வெளியாகும் தினசரிகள் அரசியல் நிலைப்பாடுகள் சார்ந்து ஏட்டிக்குப் போட்டியான செய்திகளை வெளியிடுகின்றன. அந்த செய்திகள் ஒருதலைப்பட்ச மானவை அல்லது உண்மையல்லாதவை. சில மாதங்கள் நடக்கும் இந்த அக்கப்போறால் சாதாரண வாசகர்கள் பலர் வடக்கு தினசரிகளை கைவிட்டு தேசிய தினசரிகளை நாடும் போக்கு உருவாகிவருவதை அவதானிக்க முடிகிறது.

ஊடக முதலாளிகளை மையமாக வைத்து உருவாகியுள்ள இந்த போட்டி மக்கள் நலன் சார்ந்ததல்ல. முதலாளிகள் சார்ந்தது. அதனால்த்தான் முழுமையாக அம்மணமாகும்வரை பகிரங்கத்தில் அடித்துக் கொள்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்கள், அரசியல் அபிலாசைகளை உதாசீனம் செய்யும் இந்தவிதமான போக்கு ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு நல்லதல்ல.

இந்தவகையான ஊடகங்களால் மக்கள் நலன்சார்ந்த அபிப்பிராயங் களையும், கருத்துருவாக்கங்களையும் கட்டியெழுப்ப முடியாது. முதலாளிகளின் நலன் சார்ந்த டீல்களைத்தான் செய்ய முடியும்.

முதலாளிகளின் ஊடகங்களையும், மக்களின் ஊடகங்களையும் தெளிவாக அடையாளம் காண வேண்டியது வாசகர்கள் பொறுப்பு.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**சுஜீவ சேனசிங்க**
**(அபிவிருத்தி இராஜங்க அமைச்சர்)**

பொலிஸாரின் அடாவடித்தனம் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளது. ஊழல் மோசடிகள் குறித்தான விசாரணைகளில் எமக்கு போதியளவு திருப்தியில்லை. பொலிஸாரின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு விசேட சுயாதீன நிறுவனமொன்றை உருவாக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வலியுறுத்தவுள்ளோம்.



**ரில்வின் சில்வா**
**(மக்கள் விடுதலை முன்னணி)**

பேசிப்பேசி காலத்தைக் கடத்துவதை விடவும் செயற்பாட்டில் இறங்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் பலமடைந்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் இப்போதும் வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றக் கூடாது தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தர வேண்டும். அதேபோல் நாட்டில் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கும் தீர்வு எட்டப்பட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால் இனி ஒருபோதும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது




**டேவிட் கமரூன்**
**(இங்கிலாந்து பிரதமர்)**

இங்கிலாந்தில் வசிக்கும் திருமணமான வெளிநாட்டுப் பெண்களுக்கு ஆங்கில அறிவை சோதிப்பதற்காக தேர்வு நடத்தப்படவுள்ளது, அதில் தோல்வி அடைபவர்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பிவிட வேண்டும். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்தில் தங்கியிருக்கும் பெண்களுக்கு ஆங்கில தேர்வு நடத்தப்பட வேண்டியது அவசியம். அக்டோபர் மாதம் முதல் இந்த கொள்கை செயல்படுத்தப்படும்.



**பியல் நிசாந்த**
**(நாடாளுமன்ற உறுப்பினர்)**

அரசாங்கத்தில் செயல் வீரர்கள் எவருமில்லை. வாய்ப்பேச்சு வீரர்களே அதிகம் இருக்கிறாலீ;கள். சுகாதாரத்துறையை மேம்படுத்துவதாக வாய்ச் சவடால் விட்ட போதிலும் நாட்டின் சுகாதார நிலைமைகள் மிகவும் துரதிஸ்டவசமான நிலையில் காணப்படுகின்றது. இந்த அரசாங்கத்தில் வெறும் வாய்ச் சவடால் விடும் அமைச்சர்களே இருக்கின்றார்கள்.



**மஹிந்த ராஜபக்ஷ**
**(முன்னாள் ஜனாதிபதி)**

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பு+ர்த்தி செய்கின்ற தீர்வுத் திட்டம் எவ்வாறு அமையும் என்பது பாரிய கேள்வியாக காணப்படுகின்றது. தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக தீர்வுத் திட்டம் ஒன்றுக்காக தவித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மிகவும் தீர்க்கமான காலகட்டத்தில் அரசியலமைப்பு மாற்றம் வரவுள்ளது.

# க்ளிக் பக்கம்

சமூகத்தில் நடக்கும் வித்தியாசமான யாரும் அறிந்திருக்காத விடயங்களையும் நபர்களையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் தினம் தினம் பயணிக்கும் எனக்கு யாழ் கல்வியங்காட்டு மீன் சந்தையில் சிக்கியதே இந்த காட்சி

**என்னைப் பற்றி:** நான் சுஜிதா சிவதாசன். சீமா (cima) கற்கை நெறி மாணவி



படப்பிடிப்பாளர்:
**சுஜிதா சிவதாசன்**

இடம்:
**கல்வியங்காடு மீன் சந்தை**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

'ரெட்டை நாக்குன்னு
இவர்தான் சொன்னார்.
இப்ப பாருங்க.
ஒன்றுதான் இருக்கு'



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பொங்கல் விழாவில் பிரதமர் ரணில், முதல்வர் விக்னேஸ்வரன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா.





## நம்மூர் நாயகர்கள்

வவுனியாவில் உள்ள இளைஞர்கள் ஏற்படுத்திய அமைப்பே தமிழ் விருட்சமாகும். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிற்கு உதவுவதே இவர்களின் பிரதான நோக்கம். வவுனியாவில் தமிழ் விருட்சம் அமைப்பினர் தொடர்ச்சியாக உதவிகள் செய்து கவனிப்பை பெற்றுள்ளனர். அண்மையிலும் சேமமடு சண்முகனாந்தா வித்தியாலத்தில் கல்வி கற்கும் 20 வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## இணைய யன்னல்



**www.facebook.com/ashroff.shihabdeen**
பொறாமையையும் காழ்ப்புணர்வையும் கழித்துவிட்டுப் பார்த்தால் எதிரிகள் என்று யாரும் கிடையாது!



**www.facebook.com/panbazhagi**
இரவல் வாங்கிய புன்னகை எவ்வளவு நேரம் இருக்கும் சொந்தமாக



**www.facebook.com/gowripal.sri**
அண்மைக் காலமாக ஈழத் தமிழ் அரசியல் ஆய்வுகளை படித்ததில் தலை கை கால் மூட்டுவலி மட்டுமல்ல வேறு சில வலிகளும் வந்து விட்டது .வலியை போக்க சித்த வைத்தியமா ஆங்கில வைத்தியமா சிறந்தது ?



**www.facebook.com/wmanivasan**
வவுனியா நல்ல ஊரு தான்...
அடிக்கிற பனியையும் கடிக்கிற நுளம்பையும் தாங்கிக்கொண்டால்....



**www.facebook.com/umsankarprashanth**
மேட்சு முடிஞ்சிச்சே? எதுக்காக டிவி பாத்துட்டு இருக்கீங்க?. தோனி 20 ரன்ஸ் shortன்னு சொல்லட்டும்னு காத்திட்டு இருக்கோம்! ?#ýAusvInd?



**www.facebook.com/yuvathamizh**
உலக கிரிக்கெட் வரலாற்றில் எத்தனையோ அணிகள் எத்தனையோ போட்டிகளில் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஜெயித்திருக்கின்றன. ஆனால், தோற்பதற்காக அந்தளவுக்கு மெனக்கெட்டு மொத்த உழைப்பையும் கொட்டும் ஒரே அணி இந்திய கிரிக்கெட் அணிதான். 38 ஓவர்களில் 277/2. அடுத்த 12 ஓவர்களில் மேற்கொண்டு 50 ரன்கள் கூட எடுக்க முடியாமல் ஒல் அவுட்.

Like Comment Share




முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) குடும்ப பொங்கல்









## 1-ம் பக்க தொடர்ச்சி

*மாலபே தனியார் மருத்துவக்கல்லூரிக்கு அனுமதியளிக்காதே... பல்கலைகல்வியை தனியார் மயப்படுத்தாதே...*

*இது பல்கலைகழக மாணவர்களின் ஏகோபித்த கோரிக்கை. இதனை வலியுறுத்தி மாணவர்கள் அடிக்கடி வீதிக்கிறங்க தொடங்கியுள்ளனர். மாணவர்கள் வீதிக்கிறங்குவது இதுவரை தெற்கில்த்தான் நடந்து வந்தது. பின்னர் அது படிப்படியாக பரவி கிழக்கிற்கு வந்து, இறுதியில் யாழ்ப்பாணத்திற்கும் சென்று சேர்ந்திருக்கிறது.*

*மாலபேயில் அமைந்துள்ள* South Asian Institute of Technology and Medicine (SAITM) *தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக அண்மையில் யாழ்ப்பாணத்திலும் பிரமாண்ட போராட்டம் நடந்து முடிந்துள்ளது. இதுதான் பிரச்சனையை திரி தூண்டி விட்டுள்ளது. தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக மாணவர்கள் எழுப்பிய கோசம் பலத்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.*

*இந்தவகையான போராட்டங்கள் வழக்கத்தில் பொதுமக்களிடம் எந்தவித அதிர்வையும் ஏற்படுத்துவதில்லை. 'ஏதோ கொடி பிடிச்சுக் கொண்டு போனாங்கப்பா' என்ற அளவில் மட்டும்தான் போராட்டத்தைப்பற்றி அறிந்திருப்பார்கள். ஆனால் இம்முறை மட்டக்களப்பு, யாழ்ப்பாண போராட்டங்கள் பரவலாக மக்கள் கவனங்களை ஈர்த்துள்ளது. அதிகமும் மக்களிடம் அதிருப்தியைத்தான் போராட்டங்கள் சந்தித்துள்ளது.*

*'மருத்துவதுறையை தனியார் மயப்படுத்தி காசு சம்பாதிப்பதிலேயே குறியாக உள்ள வைத்தியர்கள், கல்வியை மட்டும் தனியார் மயப்படுத்தாதே எனக் கூறுவதில் என்ன நியாயம்?' இதுதான் பரவலாக எழுந்துள்ள அபிப்பிராயம்.*

*சாதாரண பொதுமக்களிடமிருந்து சமூக ஊடகங்களிற்கு இந்த கருத்து பரவியதா அல்லது சமூக ஊடகங்களிலிருந்து சாதாரணர்களிற்கு பரவியதா என்பதை தீர்மானிக்க முடியாதபடி நடந்த சம்பவமது. ஏனெனில், இரண்டு இடங்களிலும் ஒரேவிதமான அபிப்பிராயம்தான் நிலவியது.*

*அது, 'கல்வி தனியார் மயப்படுவதை எதிர்க்க, இந்த வைத்திய மாணவர்களிற்கு எந்த அருகதையும் இல்லை' என்பதே!*

### 'சேவையை விலை பேசாதே!

*யாழ்ப்பாணத்தில் மருத்துவ மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் 'சேவையை விலை பேசாதே' என்று எழுதிய பதாதை ஒன்றும் கொண்டு செல்லப்பட்டது. அதுதான் இப்பொழுது 'சிக்கி சீரழியும்' வசனமாகியுள்ளது. மாணவர்களின் எதிர்ப்பை விமர்சிப்பவர்கள் இந்த வசனத்திலிருந்துதான் முதல்புள்ளியை வைத்துள்ளனர். 'மருத்துவத்தை சேவையென குறிப்பிடும் வைத்தியர்களின் சீத்துவம் ஊர் அறிந்தது. சேவை செய்பவர்களிற்கு எதற்கு தனியார் கிளினிக்?' என்பது அவர்களின் வாதம்.*

*சமூக வலைத்தளங்களில் இந்த வாதம்தான் காட்டுத்தீயாக பகிரப்படுவதும், லைக்ஸ் வாங்கிக் குவிப்பதும். மாணவர்கள் சார்பில் கருத்துப்போர் நடத்துபவர்கள் இந்தக் கேள்வியை சந்திக்கும்போதுதான் அதிகம் திண்டாடுகிறார்கள்.*

*மாணவர்கள் சார்பில் வைக்கப்படும் வாதம், மருத்துவ கல்வி தனியார் மயப்பட்டால் மருத்துவத்தின் தரம் குறையுமென்பது. 'கல்வி பொதுதராதரத்தில் மிகச்சாதாரண சித்தியெத்தியவர்களும், பணமிருந்தால் வைத்தியர்களாகலாமென்பது ஆபத்தான நிலையென்பது அவர்கள் வாதம். மருத்துவத்தின் மகோன்னதத்தையே அது சிதைத்துவிடும் என மாணவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.*

*தனியார் மருத்துவ கல்வி நல்லதா, கெட்டதா என்பதை ஆராய்வதை விட, இலங்கை யதார்த்தத்தை அடிப்படையாக வைத்து நிலைமைகளை அணுகுவதே புத்திசாலித்தனம். இலங்கையில் அதிக மருத்துவர் பற்றாக்குறை உள்ள பிரதேசங்களில் வடக்கும் ஒன்று. தேவையான மருத்துவர்கள் கடமையில் இல்லை. கேட்டால், நாடளாவிய மருத்துவர் பற்றாக்குறையை அதிகாரிகள் காரணமாக காட்டுகிறார்கள். தேவையான மருத்துவர்களை தயார் செய்ய அரச பல்கலைகழகங்களில் வசதியில்லையா?. இது முதலாவது கேள்வி.*

*இரண்டாவது கேள்வி, இலங்கையில் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களாக உள்ள யாருமே தனியார் மருத்துவ கல்லூரிகளில் படிக்கவில்லையா? வெளிநாட்டில் உள்ள தனியார் கல்லூரிகளில் படித்துவிட்டு வருவதை எதிர்க்காதவர்கள், உள்நாட்டில் மருத்துவக்கல்லூரி வரும்போது எதிர்ப்பதன் இரகசியம் என்ன?*

### திடீர் எதிர்ப்பு

*ஷிலிவிசி இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுதனியார் மருத்துவ கல்லூரிகளில் கற்பவர்கள், கற்றலின் பின்னர் ணிஸிறிவி என்ற தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தன் பின்னர் உள்நாட்டில் மருத்துவர்*

**அ**திகம் வர்த்தக மயப்படும் சேவையாக மருத்துவமே இலங்கையில் உள்ளது. இந்த காலப்பகுதியில் தமிழர் பகுதிகளில் அதிகளவில் திறக்கப்படும் 'வர்த்தக நிலையங்களாக தனியார் கிளினிக்குகளே உள்ளன. அரச வைத்தியசாலைகளை விட தனியார் வைத்தியசாலைகளில் கவனிப்பு, சிகிச்சை நன்றாக இருக்குமென்ற அபிப்பிராயம் முழு இலங்கையர்களிடமும் உள்ளது. சத்திரசிகிச்சை, துறைசார் வைத்திய நிபுணர்களில் பெரும்பாலோனோர் தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிகிறார்கள். குறிப்பாக தமிழ் பகுதிகளில் இது அதிகம் நடக்கிறது. வடக்கில் அதிக வைத்தியர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரிவதும், போதனா வைத்தியசாலையின் எதிர்ப்புறமாக ஏராளம் தனியார் வைத்தியசாலைகள் அமைந்துள்ளதும் கவனிக்க வேண்டிய விடயம். யாழ்போதனா வைத்தியசாலையின் சில வைத்தியர்களிடம் சிகிச்சைபெறுவதென்றால், தனியார் கிளினிக்கில் அவரிடம் சிகிச்சை பெற்றிருக்க வேண்டும் என்றும், கிளினிக்கிற்கு வரும் நோயாளர்களைத்தான் வைத்தியசாலையில் அனுமதித்து முறையாக கவனிக்கிறார்கள் என்பதும் மக்களின் நீண்டநாள் குற்றச்சாட்டு. அதுதவிர, சில வைத்திய உபகரணங்களை வெளியில் வாங்க அனுப்பும்போது வைத்தியர்களின் சொந்த நிறுவனங்களில் அவற்றை வாங்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவதாகவும், வைத்தியர்களின் ஏவலாட்களாக வைத்தியசாலை ஊழியர்கள் சிலர்தான் இவற்றை முன்னின்று நடைமுறைப்படுத்துதாகவும் மக்களின் குற்றச்சாட்டு தொடர்கிறது.

**பி**ரபல வைத்திய நிபுணர்கள் பெரும்பாலானவர்கள் தனியார் கிளினிக் வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் தனியார் கிளினிக்கில் சிகிச்சை பெறுபவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அரசவைத்தியசாலைகளிற்கு வரும்போது முன்னுரிமை பெறுகிறார்கள். சிகிச்சைக்கு முதலில் வந்தவர்கள், ஆபத்தானவர்களை விட தமது தனியார் கிளினிக்கில் சிகிச்சை பெற்றவர்களிற்கே முன்னுரிமை வழங்க வேண்டுமென அந்தந்த பிரிவுகளிற்கு பொறுப்பான வைத்திய நிபுணர்களால் ஏனைய வைத்திய நிபுணர்கள் வலியுறுத்தப்படுகின்றனர். அதனை மீறி நேர்மையாக நடக்கும் இளம்வைத்தியர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கின்றனர். இப்படியான நெருக்கடிகளால் யாழ்போதனா வைத்தியசாலையிலிருந்தும் சில நேர்மையான வைத்தியர்கள் இடமாற்றம் பெற வேண்டியிருந்ததாக கூறப்படுகிறது.

**இ**துவரை தனியார் கிளினிக் பக்கம் காலெடுத்தும் வைக்காத முன்னுதாரண வைத்தியர்கள் பலர் உள்ளனர். மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழும் அந்த நேர்மையான வைத்தியர்களின் சேவைகளை எல்லாம் தனியார் கிளினிக் வைத்தியர்களின் 'தில்லாலங்கடி' அடித்துச் சென்றுவிடுகிறது.



களாக கடமையாற்றுகிறார்கள். ரஸ்யா, பங்களாதேஷ், ஐரோப்பிய நாடுகளின் மருத்துவ கல்லூரிகளில் படித்து பட்டம்பெற்ற வைத்தியர்கள் இப்போது அனேகர் இங்கு கடமையாற்றுகிறார்கள். நிலைமை அப்படியிருக்க, மாலபேயை முன்வைத்து திடீர் போராட்டம் வெடித்ததன் பின்னணி என்ன?

வளர்ச்சியடைந்த நாடுகள் எல்லாவற்றிலும் மருத்துவக்கல்வி தனியார்மயப்பட்டுள்ளது. என்றாலும், தனியார் கல்வி நிலையங்களை கண்காணிக்க முறையான ஏற்பாடு அரசுகளிடம் உள்ளது. இதன்மூலம் கல்வியின் தரத்தை அரசுகள் பேணுகின்றன. இலங்கைக்கும் அதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

தமது போராட்டத்தை எதிர்ப்பவர்கள், தம்மீதான பொறாமைக்காரர்கள் என நாளைய டொக்ரர் தம்பிமார் சிலர் பேஸ்புக்கில் கொதித்தெழுந்த சம்பவங்கள் எல்லாம் நடந்திருந்தன. 'தனியார் கல்வியை ஆதரிக்கிறீர்கள், நாளை உங்கள் உயிருக்கும் உலை வைப்பார்கள், பரவாயில்லையா?' என்ற சாரப்பட்ட மிரட்டலும் சமூகவலைத் தளங்களில் உலாவியது.

இந்த மிரட்டல்'காரர்களை தெறித்து ஓடவைப்பது 'படித்துவிட்டு நீங்கள் செய்வதற்கு பெயரா சேவை?' என்ற கேள்விதான்.

### எதை தடை செய்ய வேண்டும்?

தனியார் மருத்துவ கல்லூரிகளினால் சாதகங்களும், பாதகங்களும் இருக்கின்றன. ஆனால் ஒரேயடியாக அவற்றை தடை செய்வது புத்திசாலித்தனமான காரியமாக இருக்காது. தனியார் நிறுவனங்களின் கல்வித்தரத்தை உறுதி செய்யும்விதமான பொறிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும். ஏனெனில் முறையான பல தனியார் மருத்துவ கல்வி நிறுவனங்கள் உலாகளாவியரீதியில் இயங்கத் தொடங்கியுள்ள நிலையில், அவற்றை நோக்கி மாணவர்கள் உந்தப்படுவது இயற்கை. அவற்றிற்கு தடை போடுவது சாதகமான விளையை ஏற்படுத்தாது. தனியார் போட்டிச்சந்தையில் வெற்றிபெறுவதற்காக அதிக பௌதீக வளங்கள், முறையான கல்வி போன்ற வசதிகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மாறாக, அவசரகதியில் 'நம்மிடம் படித்தால் நிச்சயம் ஊசிபோடலாம்' பாணி பிரச்சாரங்கள், காசுக்காக மாணவர்களை சித்தியடைய வைக்கும் கலாசாரங்களிற்கு அரசுகள் முறையான கடிவாளம் போட வேண்டும். அதையெல்லாம் செய்ய வேண்டியது அரசுகள்தான்.

**பெனடிக் போல்பிறைட்**
யாழ் மருத்துவபீட மாணவன்



அரச பல்கலைகழகங்களில் கல்வித்தரத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்பட்டு, தரமான கல்வி வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் பல்கலைகழங்களில் அந்த இரண்டும் நடப்பதில்லை. வருடத்தில் ஒருமுறைதான் அரச பல்கலைகழகத்தில் மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டு வெளியேறுகிறார்கள். ஆனால் தனியார் பல்கலையில் வருடத்திற்கு இரண்டுமுறை வெளியேறுகிறார்கள். இதனால் அரச பல்கலையில் படிப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் 13 பாடங்கள் படிக்கிறோம். ஆனால் தனியார் பல்கலையில் முக்கியமான சில பாடங்கள் இல்லை. நாங்கள் பரீட்சையில் சித்தியடையாமல் விட்டால் தொடர்ந்து படிக்க வேண்டும். ஆனால் காசு கட்டி படிக்கும் தனியார்துறை சித்தியடையாதவர்களை மீண்டும் படிப்பிப்பார்களா என்பது தெரியவில்லை.

தனியார் கல்வி நிறுவனங்களிற்கு எதிரான போராடுவது புத்திசாலித்தனமான விடயமல்ல. ஒன்றில் அரசகல்வியை முறைப்படுத்தி, தனியார் கல்விமுறையை முற்றிலும் தடை செய்ய வேண்டும். ஆனால் அப்படி செய்வதன் பின்னணியில், அரசபல்கலைகழக நுழைவு அனுமதி பெற்றவர்கள் மட்டும்தான் வைத்தியர்களாகலாம் என்ற ஒரேயொரு காரணம் மட்டும்தான் இருக்கும். அப்படி இருப்பதற்கு என்ன அவசியம்?

மருத்துவத்தை தனியார் மயப்படுத்தாதே என்று மருத்துவர்கள் கோரிக்கை வைத்திருந்தால் மக்களும் ஆளுக்கொடு 'ஜே' போட்டிருப்பார்கள். அந்த கோரிக்கைக்குள் தனியார் மயப்படும் சிகிச்சை முறையும் உள்ளடங்குமல்லவா. ஆனால் படிக்கும் காலத்திலேயே நமது மாணவர்கள் தூரநோக்குடன் செயற்பட்டு கல்லாப் பெட்டிக்குள் கைவிடாமல் பார்த்துள்ளனர்.

தொழில் போட்டியாளர்கள் என்றோ, பணத்தால் பட்டம் வாங்குகிறார்கள் என்றோ தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்கள் மீது அரச பல்கலைகழக மாணவர்களின் கோபம் திரும்பினாலும், பெரும்பாலான மக்கள் சொல்கிறார்கள் 'அதற்கெதிராக போராடும் அருகதை உங்களிற்கு இல்லை' என்றுதான். சாதாரண மக்கள் அவசரமாக எதிர்பார்ப்பது தனியார் மருத்துவ கல்லூரிகளை மூட வேண்டுமென்பதையல்ல. மருத்துவத்தை தனியார்மயப்படுத்தும் வைத்தியர்களின் சிந்தனையை மாற்ற வேண்டுமென்றுதான்!

அரசவைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகள் மீது வைத்தியர்களோ, வைத்திய சாலை ஊழியர்களோ பரிவுடன் நடப்பதில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. அரசவைத்திய சாலைகளில் சிகிச்சைபெறும் நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் தமது நோயின் முழுமையான தன்மை, சிகிச்சைமுறை பற்றி முழுமயாக தெரிந்திருப்பதில்லை, வைத்தியர்கள் சொல்வதில்லையென்ற குற்றச்சாட்டும் உள்ளது. அதுபற்றி கேட்டால், தம்மை அவமதித்ததைபோல வைத்தியர்கள் உணர்கிறார்கள் என்பது குற்றம் சாட்டுபவர்களின் கருத்து. இப்படியான நடைமுறை களினாலேயே மக்கள் தனியார் வைத்தியசாலைகளை அதிகம் நாடுகிறார்கள். தனியார் வைத்தியசாலைப்பக்கம் மக்களை திசை திருப்ப வைத்தியர்கள் அப்படி நடந்து கொள்கிறார்களோ என்று சந்தேகம் கிளப்புபவர்களும் உள்ளனர்.

**எஸ்.சஞ்ஜீவ்**
யாழ் மருத்துவபீட மாணவன்



அரச பல்கலைகழகங்களில் கிடைக்கும் தரமான கல்வி தனியார் பல்கலைகழகங்களில் கிடைப்பதில்லை. கல்வியில் முதல்நிலை பெற்று பல்கலை கழகம் சென்றவர்களும், பல்கலைகழகம் செல்ல முடியாமல் தனியார் பல்கலைகழங்களில் படித்து வருபவர்களும் சேவையில் ஈடுபடும்போது தரவித்தியாசம் ஏற்படும்.

தனியார் பல்கலைகழகங்களால் அரசுக்கு வருமானம் கிடைக்கலாம். ஆனால் இவற்றால் அரச பல்கலைகழக மாணவர்களிற்கு வேலையில்லா பிரச்சனை உள்ளிட்ட பல பிரச்சனைகள் வரும். இதனால் நாட்டிலுள்ள ஒவ்வொருவமே பாதிக்கப்படுவார்கள்.








யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் 31வது பட்டமளிப்பு விழா கடந்த வாரம் நடந்தது. துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் பட்டமளிப்பு நடந்தது. இதில் சுமார் 1939 மாணவர்கள் பட்டங்களை பெற்றுள்ளனர்.



வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் கட்டாக்காலிகளாக திரிந்த சுமார் 66 மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தண்டப்பணம், பிடிகூலி, பராமரிப்பு செலவு என்பவற்றை செலுத்தி உரிமையார்கள் மாடுகளை பெற்றுக் கொண்டனர்.




படுவான்கரை பகுதியில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அறக்கொட்டி, எரிபந்தன் போன்ற நோய்களின் தாக்கத்தால் அங்குள்ள வயல்கள் பெருமளவில் அழிவடைந்துள்ளன.






முல்லைத்தீவு பழம்பாசி கிராமத்தில் பழங்களை பொதி செய்யும் வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இளைஞர் விவசாய கழகத்தினூடாக இங்கு உற்பத்தி செய்யப்படும் பப்பாசி மத்தியகிழக்கு நாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனினும், இதுவரை பொதி செய்யும் வசதியிருக்கவில்லை. அந்தகுறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.









## பொங்கல் பொலிற்றிக்ஸ்

கடந்தவாரம் நடந்த தேசிய பொங்கல் நிகழ்வில் நிறைய சறுக்கல்கள். நிகழ்வு எதிர்பார்த்த மாதிரி பொங்கி வழியவில்லையென்பது சாதாரணமாக செய்திகளை படித்தவர்களிற்கே தெரியும். உள்ளூர் தலைகளை பெரியளவில் காணவில்லையென்பது சுவாரஸ்ய இழப்பின் முக்கிய காரணம். ஆளுந்தரப்புத்தான் அதிகமாக நிகழ்வில் காணப்பட்டது. பலாலியில் நடந்த பொங்கலில் சேனாதிபதியும், வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பொங்கலில் வடக்கு ராஜவும் கலந்து கொண்டனர். வேறெந்த 'தமிழர்'களும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளதாம்.

அழைப்பிதழ் கிடைத்ததும் 'ஓசிப்பொங்கலை ஒரு பிடி பிடிக்கலாம்' என்றுதான் எல்லோரும் கணக்குப் போட்டிருந்தனர். ஆனால் அரசியல்கைதிகள்தான் நமது தலைவர்களின் வி.பியை எகிற வைத்துள்ளனராம். 'நாங்கள் சிறையிலிருக்க உங்களிற்கு பொங்கலா?. யாரும் போகக்கூடாது. தேசிய பொங்கலில் கலந்து கொள்ளும் துரோகிகளை ஒதுக்குவோம்' என்பது மாதிரி குண்டைப்போட தலைவர்கள் வெலவெலத்துப் போனார்களாம். எல்லோரது வி.பியும் எகிற சர்க்கரை உடம்பிற்கு ஆகாதென ஒதுங்கிக் கொண்டு விட்டனராம்.

நிழ்விற்கு போனால் 'மைத்திரி வித் செல்பி' ஒன்றாவது ஆதாயம் கிட்டுமென கணக்குப் பண்ணியிருந்தவர்கள் வீட்டிலிருந்து நிகழ்ச்சிகளை பார்க்க வேண்டியதாகிவிட்டது. இந்த நெருக்கடியால்த்தான் ஜனாதிபதியும் வராமல் விட்டுவிட்டார் என்கிறார்கள்.

இரண்டு பொங்கல்களிலும் வடக்கின் ராஜாவும், சேனாதிபதியும் கலந்து கொண்டாலும் சமூக ஊடகங்களில் அதிகம் 'சின்னாபின்னம்' ஆனது சேனாதிபதிதான். 'இந்தக்காணிகளையும் விடுவிக்க சொல்லத்தான் வந்தேன்' என்பதைப் போல அவர் ஒரு அறிக்கைவிட அது சமூகவலைத்தளங்களில் மீம்ஸ் ஆனது. ஆளாளுக்கு கூட்டம்போட்டு கலாய்த்தார்கள்.

வடக்கின் ராஜா சொல்ல வேண்டியதை சொல்லி ஸ்கோர் செய்ததும் நடந்தது.

## சித்தர் வழி

வீட்டுக்குள் இப்பொழுது பெரிய குழப்பம். நாலு கட்சியும் நாலு திசையில் நிற்கிறது. அரசு போடும் பாதையால் பயணிக்க முடியாதென்பது மற்றவர்களின் பிடிவாதமாக இருந்தது. அரசுக்கட்சிதானே இப்பொழுது ஆட்சியாளர் மாதிரி. அதனால் சிலபல பதவிகளை வாங்கிக் கொடுத்து 'மன்னார் பணக்காரனை' வளைத்துப் போட்டு விட்டனர். முன்னர் மண்டையில் போட்ட கட்சிதான் எகிறிக் கொண்டிருந்தது. அரசுக்கட்சிக்கு எதிராக நாளாந்தம் நாலு அறிக்கை விடுவதை வழக்கமாக வைத்திருப்பதுடன், பேரவைப்பக்கமும் ஒதுங்கிவிட்டார்.

இப்பொழுது எஞ்சியிருப்பது 'சித்தர்' கட்சி மட்டுமே. வழக்கம் போல அவர்கள் எந்தப்பக்கமும் இல்லாமல் நடுவில் உட்கார்ந்திருக்கிறார்களாம். அண்மையில் 'தலைவர்' கூப்பிட்டு தங்களுடன் இருக்க வேண்டுமென கேட்டுள்ளாராம். தீர்வு விடயத்தை பூதம்காப்பதைப் போல இரகசியமாக தலைவர் வைத்துள்ளார் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுப்பப்பட்டுவரும் நிலையில், அதுபற்றி விளக்கி 'இதற்கு மேல் ஆசைப்படக்கூடாது' என சொல்லி ஆதரவு கேட்டுள்ளாராம்.

## தந்தி அறுந்த வீணை

வீணைக்கட்சியின் சந்திரமானவர் தலைவருக்கு 'டாட்டா' காட்டப் போகிறார் என்பதை ஏற்கனவே தீபத்தில் குறிப்பிட்டிருந்தோம். அது கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது. பின்னர் எல்லாம் அமைதியாக இருந்தது. ஆனால் கட்சியுடன் ஒட்டுமில்லை, உறவுமில்லையென்றுதான் சந்திரமானவர் இருந்து வந்தார். கட்சிக்குள்ளேயே அவரை மறந்து விடுவார்கள் என்ற நிலைமை தோன்றியபோதுதான், அடுத்த நகர்வில் இறங்கியுள்ளார் அவர்.

வீணைக்கட்சியை விட்டு விலகுகிறேன் என அறிக்கைவிடப் போகிறார் என்கிறார்கள். கட்சியை விட்டு பிரிவதாக காட்டாமல், கட்சியை விட்டு விலகுகிறேன் என அறிவிக்கப் போகிறாராம். இதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபடுகிறார் என்கிறார்கள்.

இதேவேளை, இந்த தகவலை எப்படியோ மோப்பம் பிடித்த வீணைக்காரர் அவராக போக முன்னர், நாமாக அனுப்புவதாக காட்டினால் என்னஎன்றும் யோசிக்கிறாரார்களாம். வெளியில் போய் அவர் ஜொலிப்பதை தடுக்க அப்படியொரு திட்டம் தீட்டுகிறார்களாம்.

சந்திரமானவர் வெளியில் போய் என்ன செய்யப் போகிறார் என்பதைதான் வீணைக்காரர் 'கெஸ்' பண்ண முடியாமல் திண்டாடுகிறார்களாம். வெளியில் போய் தனித்து நிற்கப் போகிறாரா, யானையில் சவாரி செய்யப் போகிறாரா, வீட்டுக்குள் நுழையப் போகிறாரா என்பதில்த்தான் வீணைக்காரர் குழம்பிப் போயுள்ளனர்.

---



# உரிமையை உரைப்போம்

மாயாமகேஸ்

பெண்களின் உரிமைகளும் அவர்களிற்கு இச் சமூகத்தில் வழங்கப்படும் அந்தஸ்தும் நாம் அறிந்தே. அதை எடுத்துக்காட்டும் வகையில் சம்பவம் ஒன்றை சந்திக்க நேர்ந்தது.

கணவன், மனைவி மட்டும் கொண்ட ஒரு சிறிய குடும்பம். இருவரும் அறுபது வயதைக் கடந்தவர்கள். அவர்களின் தொழில் தேவைக்காக மனைவி வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்திருந்தார். அவர் அறுபது வயதைக்கடந்தவர் என்பதால் அவரோடு அறுபது வயதைவிடக் குறைந்தவர் இணைய வேண்டும்.இணைபவர் பெண்ணாக இருப்பின் அவள் இணைவதற்கு வீட்டுத்தலைவரின் சம்மதக் கடிதம் பெறப்படுகிறது. இங்கு ஆணின் வயது மற்றும் வருமானம் கூட கருத்தில் கொள்ளப்படவில்லை.

இவை பெரும்பாலன அரச வங்கிகளில் உள்ள ஒரு நடைமுறையாகும். கடன் மீளச்செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையாகும். கடனுக்கு விண்ணப்பித்தவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீளச் செலுத்த முடியாது போயின் அவருடன் இணைந்து இருப்பவர் செலுத்த வேண்டி ஏற்படும்.

அவர் பெண்ணாக இருப்பினும் ஆணாக இருப்பினும் சுயசம்பாத்தியம் உள்ளவராக கடன் மீளச் செலுத்தக் கூடியவராக இருப்பது சிறந்தது. சுயசம்பாத்தியம் உள்ள பெண்ணாக இருப்பின் பிறரின் சம்மதக் கடிதம் அவசியந்தானா? மேலும் சம்மதக் கடிதம் வழங்குபவரின் வயது, வருமானம் என்பது கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கடன் பெறும் பெரும்பாலான பெண்களில் ஒருசிலர் கடன் செலுத்த முடியாமல் போவதுண்டு. இதற்கு ஆண்களும் விதிவிலக்கல்ல. வங்கியில் கடன் வாங்கி மீளச் செலுத்தமுடியாத ஆண்களும் உண்டு.

இது ஒரு உதாரண சம்பவமாகும். வளர்ச்சியடைந்து வரும் இலங்கையில் இது போல சில சந்தர்ப்பங்களில் பெண்களின் மீதான பார்வையில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. இவ்வாறான நடைமுறையின் பின்னணியில் இருக்கும் காரணிகள் வலிதானவையா?

பெண்கள் வீட்டு நிர்வாகத்திலிருந்து படிப்படியாக முன்னேறி தற்போது அலுவலக நிர்வாகங்கள் வரை சிறப்பாக செயற்படுகின்றனர். அடுப்படியில் இருந்த பெண்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்று வீட்டு நிர்வாகத்தை சிறப்பாக நடத்துகின்றனர். குடும்பம் தொடர்பான முடிவுகளை மேற்கொள்பவர்களாக விளங்குகின்றனர். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட வேலைக்குச் செல்கின்றனர். அங்கு பல போராட்டங்களின் பின் சிறந்த தீர்மானங்களை எடுப்பவர்களாக பல உயரிய பதவியில் இடம் பெறுகின்றனர். விதவைகள் தமது குடும்பத் தேவைக்காக ஆண்களின் துணையின்றி சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேற்றம் கண்டுள்ளனர். சிறந்த ஆலோசகர்களாக, சிறந்த நிர்வாகிகளாக, தொழில் வல்லுனர்களாக மற்றும் பல பரினாமங்களைக் கண்டுள்ளனர். பெண்களின் முன்னேற்றம் விண்வெளிவரை களம் கண்டுள்ளது. அதையும் தாண்டிச் செல்லக்கூடியது.

இவ்வரிருக்க சில சமுதாயங்களில் தூசு தட்டப்படாத சட்டங்கள் தூக்கிச் செல்லப்படுகின்றன. இவை இன்னமும் தேவைதானா? சில மகளிர் முன்னேற்றத்திட்டங்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் இக்காலத்தில் இது போன்ற நடைமுறைகளையும் மாற்ற முன்வர வேண்டும். காலத்திற்கேற்ப பழையன கழிதலும் புதியன புகுதலும் வரவேற்கப்படவேண்டும்.



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

### என் சோதிடம்

# அதிர்ஷ்ட விஞ்ஞானம் தரும் வாழ்வு முன்னேற்றங்கள்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

***பிறப்பு எண் 04:*** *1,8,4 எண் கொண்டவர்கள் உதவுவர். 4ஆம் எண்காரர்கள் சாதாரண நிலையில் உதவுவர். 1ஆம் எண்காரர்கள் வாழ்க்கை சீரமைப்பிற்கு உதவுவர். 8ஆம் எண்காரர்கள் நீடித்தநாள் நிலமைக்கும் கருமத்திற்கும் உதவுவர்.*

***பிறப்பு எண் 05:*** *1,9,8 எண் கொண்டவர்கள் உதவுவர். இவர் களுக்கு 1,9,8 எண்காரர்கள் சாதாரணம், மத்திமம், உத்தமம், என்ற நிலையில் மாறி, மாறி உதவி செய்வர். ஏனைய எண்காரர்களும் இடையிடையே உதவுவர்.*

***பிறப்பு எண் 06:*** *6,9,3 எண்கொண்டவர்கள் உதவுவார். சாதாரண உதவிகளை 6ஆம் எண்காரர்களிடம் எதிர்பார்க்க முடியும். நடுத்தர வாழ்க்கை கட்ட மைப்பு உதவிகளை 9 எண்காரர்கள் செய்வர். நீடித்த நீண்ட நாள் பலன்பெறும் உதவிகளை 3 எண்காரர்கள் செய்வர்.*

***பிறப்பு எண் 07:*** *1,2,7 எண் கொண்டவர்கள் உதவுவர். சாதாரணம் 1ஆம் எண்ணும், நடுத்தரம் 2ஆம் எண்ணும், உத்தமம் 7ஆம் எண்ணும் இவர்களுக்கு உதவுவர். இதைவிட 4ஆம் எண்காரர்களும் இவர்களுக்கு தருணத்திற்கு உதவுவர்.*

***பிறப்பு எண் 08:*** *1,4,8 எண் கொண்டவர்கள் உதவுவர். சாதா ரண உதவிகளை 8ஆம் எண்காரர் களிடமிருந்து பெற முடியும். நடுத்தர வாழ்க்கை சீரமைப்பு உதவிகளை 1ஆம் எண் காரர்கள் செய்வார். நீடித்து நிலைக்கும் உதவி களை 4ஆம் எண் காரர்களிட மிருந்து எதிர்பார்க்கலாம்.*

***பிறப்பு எண் 09:*** *3,5,9, எண் கொண்டவர்கள் உதவுவர். 9ஆம் எண்காரர்கள் சாதாரண நிலையில் உதவுவர். 5ஆம் எண்காரர்கள் வாழ்க்கைச் சீரமைப்புக்கான உதவி களைச் செய்வர். 3ஆம் எண் காரர்கள் நீண்டநாள் நிலைக்கும் கருமங்களுக்கு உதவுவார்.*

*இங்குதரப்பட்ட விடயங்களை நன்கு படித்து விளங்கிக்கொண்டும், கூட்டுமுயற்சி ஒன்றில் பங்கா ளராக சேர்வது குறித்து முடிவு செய்து உங்கள் கருமங்களை முன்னெடுக்கவும்.*

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 01 | 1 | 1 அல்லது 4 |
| 01 | 2 | 1 அல்லது 7 |
| 01 | 3 | 1 அல்லது 9 |
| 01 | 4 | 1 அல்லது 4 |
| 01 | 5 | 1 அல்லது 5 |
| 01 | 6 | 1 அல்லது 6 |
| 01 | 7 | 1 அல்லது 7 |
| 01 | 8 | 5 அல்லது 1 |
| 01 | 9 | 1 அல்லது 9 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 02 | 1 | 1 அல்லது 7 |
| 02 | 2 | 1 அல்லது 7 |
| 02 | 3 | 1 அல்லது 9 |
| 02 | 4 | 1 அல்லது 4 |
| 02 | 5 | 5 அல்லது 1 |
| 02 | 6 | 6 அல்லது 1 |
| 02 | 7 | 1 அல்லது 7 |
| 02 | 8 | 5 அல்லது 1 |
| 02 | 9 | 9 அல்லது 1 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 03 | 1 | 1 அல்லது 9 |
| 03 | 2 | 1 அல்லது 7 |
| 03 | 3 | 9 அல்லது 1 |
| 03 | 4 | 1 அல்லது 5 |
| 03 | 5 | 5 அல்லது 9 |
| 03 | 6 | 9 அல்லது 6 |
| 03 | 7 | 1 அல்லது 9 |
| 03 | 8 | 5 அல்லது 4 |
| 03 | 9 | 9 அல்லது 1 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 04 | 1 | 1 அல்லது 9 |
| 04 | 2 | 1 அல்லது 7 |
| 04 | 3 | 1 அல்லது 9 |
| 04 | 4 | 1 அல்லது 5 |
| 04 | 5 | 5 அல்லது 1 |
| 04 | 6 | 6 அல்லது 9 |
| 04 | 7 | 1 அல்லது 7 |
| 04 | 8 | 5 அல்லது 1 |
| 04 | 9 | 9 அல்லது 1 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 05 | 1 | 1 அல்லது 5 |
| 05 | 2 | 5 அல்லது 1 |
| 05 | 3 | 5 அல்லது 9 |
| 05 | 4 | 5 அல்லது 1 |
| 05 | 5 | 5 அல்லது 9 |
| 05 | 6 | 5 அல்லது 6 |
| 05 | 7 | 5 அல்லது 1 |
| 05 | 8 | 5 அல்லது 1 |
| 05 | 9 | 5 அல்லது 9 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 06 | 1 | 1 அல்லது 6 |
| 06 | 2 | 6 அல்லது 1 |
| 06 | 3 | 6 அல்லது 9 |
| 06 | 4 | 6 அல்லது 1 |
| 06 | 5 | 6 அல்லது 5 |
| 06 | 6 | 6 அல்லது 1 |
| 06 | 7 | 6 அல்லது 1 |
| 06 | 8 | 5 அல்லது 1 |
| 06 | 9 | 6 அல்லது 9 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 07 | 1 | 1 அல்லது 7 |
| 07 | 2 | 1 அல்லது 7 |
| 07 | 3 | 1 அல்லது 9 |
| 07 | 4 | 1 அல்லது 4 |
| 07 | 5 | 5 அல்லது 1 |
| 07 | 6 | 6 அல்லது 1 |
| 07 | 7 | 1 அல்லது 4 |
| 07 | 8 | 5 அல்லது 1 |
| 07 | 9 | 9 அல்லது 1 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 08 | 1 | 5 அல்லது 1 |
| 08 | 2 | 5 அல்லது 1 |
| 08 | 3 | 5 அல்லது 3 |
| 08 | 4 | 5 அல்லது 1 |
| 08 | 5 | 5 அல்லது 1 |
| 08 | 6 | 5 அல்லது 1 |
| 08 | 7 | 5 அல்லது 1 |
| 08 | 8 | 5 அல்லது 4 |
| 08 | 9 | 1 அல்லது 3 |

| பிறப்பு எண். | கூட்டு எண். | பெயர் எண். |
|---|---|---|
| 09 | 1 | 1 அல்லது 9 |
| 09 | 2 | 9 அல்லது 1 |
| 09 | 3 | 9 அல்லது 1 |
| 09 | 4 | 9 அல்லது 1 |
| 09 | 5 | 9 அல்லது 5 |
| 09 | 6 | 9 அல்லது 6 |
| 09 | 7 | 9 அல்லது 1 |
| 09 | 8 | 5 அல்லது 9 |
| 09 | 9 | 9 அல்லது 1 |

**எண்களும், ஆங்கில எழுத்துக்களும்.**

01 - A,I,J,Q,Y
02 - B,K,R
03 - C,G,L,S
04 - D,M,T
05 - E,H,N,X
06 - U,V,W
07 - O,Z
08 - F,P

**ஆங்கில எழுத்துக்களின் குணாம்சம்.**

**எண்01**

*A என்ற எழுத்து நல்ல ஜீவசக் தியும் பரம்பொருளின் சக்தியையும் குறிக்கும்.*

*I என்றஎழுத்துவிடாமுயற்சிகள் தரும்.*

*J என்ற எழுத்து அன்புமிக்க இதயம் உடையதாய் அமையும்.*

*Q என்ற எழுத்து ஒருவரை மேல் எழுப்பும் சக்தி கொண்டது.*

*Y என்ற எழுத்து மென்மையான சுபாவம் கொண்டது.*

**எண்02**

*B என்ற எழுத்து ஆத்ம சக்தி யையும் நன்மைகள் அதிகம் தரும்.*

*K என்ற எழுத்து சேவை மனப்பான்மை கலையார்வத்தை யும் குறிக்கும்.*

*R என்ற எழுத்து முன்னேற துடிப்பதை குறிக்கும்.*

**எண்03**

*C என்ற எழத்து வன்மை ஆண்மை சாதனை இவற்றை தரும்.*

*G என்ற எழுத்து மிதமிஞ்சிய தன்னம்பிக்கையையும் தாங்கும் சக்தி தரும்.*

*L என்ற எழுத்து காரியசமந்தர; ஏவல் செய்து வேலை வாங்குதல்.*

*S என்ற எழத்து நல்லது கெட்டது சிவப்பு பச்சை என அமையும்.*

**எண்04**

*D என்ற எழுத்து நேர்மை துணிச்சல் சலிக்காமை காட்டும்.*

*M என்ற எழுத்து விவேகம் நல்ல அபிப்பிராயம் உழைப்பு தரும்.*

*T என்ற எழுத்து அபாரசக்தி கொண்டது தீவிரத்தன்மை தரும்.*

**எண்05**

*Eஎன்றஎழுத்துசூழ்நிலைகளுக்கு ஒத்துப்போகும் தன்மை தரும்.*

*H என்ற எழுத்து பின் வரப்போவதை முன்கூட்டியே உணர்த்தும்.*

*N என்ற எழுத்து அன்பு ஆசை மோகம் போகம் கருணை காட்டும்.*

*S என்ற எழுத்து தெரியாத விடயங்களை தெரியவைக்கும் சக்தி கொண்டது.*

**எண்06**

*U என்ற எழுத்து ஆண்மீக வாழ்'வில் ஈடுபடுத்தும்.*

*V என்ற எழுத்து ஆழ்ந்த நட்பை ஆராய்ந்து பெறும் நிலை.*

*W என்ற எழத்து அன்பு அறிவு ஆர்வம் காட்டும்.*

**எண்07**

*O என்ற எழுத்து நல்ல மனோ பலத்தை குறித்துக்காட்டும்.*

*Z என்ற எழுத்து மந்திரம் தந்திரம் விவேகம் கவர்தல் தரும்.*

**எண்08**

*F என்ற எழுத்து நிர்வாகத்துறை யில் துணிச்சல் திறமை காட்டும்.*

*P என்றஎழுத்து ரகசியத்தன்மை வேதாந்தம் தானம் தர்மம் இவற்றைக்குறிக்கும்.*



# பன்னிரண்டு இராசிகளிற்குமான வாரபலன்

## 24.01.2016 முதல் 30.01.2016 வரை

திரு சி.இராசநாயகம்.
சோதிட ஆலோசகர்.



**மேடராசி**

பிரயாணங்களில் பாதிப்பு, செய்கருமங்கள் இலாபம், நஷ்டம் மாறி, மாறி அமைதல். தேகசுகம் பாதிக்கப்படுதல், தூரதேசச்செய்தி கிட்டுதல், நண்பர்களால் உதவிகள், அழகியல் சம்பந்தப்படுதல், பெரியோர் நட்புக்கள், இன,சன, பந்து சேர்க்கை, இடையிடையே மனச்சஞ்சலம் காணப்படுதல், பெண்களுடன் சச்சரவுப்படுதல், அலைச்சல் நிலை காணப்படுதல், அகாலபோஜனம், பொருட்கள் திருட்டுப்போதல் போன்ற பலன் அமையும்.

அதிர்ஷ்ட நாள்:27,28,30 திகதிகளில் முருகன், வைரவர் தெய்வ வணக்கம் நன்று. சனீஸ்வரர், ஆஞ்சநேயர் துணையும் பெறுக.



**இடபராசி:**

இன,சன,பந்து உறவு பாதிக்கப்படுதல். சில சந்தர்ப்பங்களில் அவமானப்படுதல், பணவிரயம் இருத்தல், புதிய முயற்சிகளுக்கு சந்தர்ப்பம் கிட்டுதல், இடம் மாறிச் செல்லுதல், சுப செய்திகள் கிடைத்தல், மனதில் சந்தோசம், தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படுதல், மறைந்த பொருள் கிடைத்தல், முயற்சிகளுக்கு நன்மை இல்லாது போதல், நல்ல ஆடைகள் கிடைத்தல், மனதில் ஒருவகை உடற்தாகம் இருத்தல், குடும்ப சுகம் கிட்டுதல், வார இறுதியில் யாவும் நிம்மதியாய் நிறைவாதல் போன்ற பலன் அமையும்.

அதிர்ஷ்ட நாள்:24,27,28 திகதிகள் துர்க்கை தெய்வ வணக்கம் நன்று. சனீஸ்வரர், ஆஞ்சநேயர் துணையும் பெறுக.



**மிதுனராசி:**

தேகசுகம் கிடைத்தல், செய் தொழில் இலாபம் கிட்டுதல், இன,சன உறவு பாதிக்கப்படுதல், இடையிடையே சிறுசிறு சச்சரவுகளில் சிக்குதல், பெண்களினால் சில துன்பதுயரம் சந்தித்தல்,பெரிய மனிதர்களின் சந்திப்புக் காணப்படுதல், உணவில் வெறுப்பு, அநாவசிய செலவுகளைச் சந்தித்தல், அழகியல் சார்ந்தவை சம்பந்தப்படுதல், கருமங்களை செவ்வனே நிறைவாக்குதல், சுப செய்தி கிடைத்தல், புதிய புதிய பொருட்கள் சேர்த்தல், எதிரி, பகையாளியால் சில துன்பம் அனுபவித்தல் போன்ற பலன் அமையும்.

**அதிர்ஷ்ட நாள்: 26,27,28 திகதிகள் மகாவிஷ்ணு, அஞ்சநேயர் தெய்வ வழிபாடு நன்று.**



**கடகராசி:**

நோய்ப்பிணி, துயரம் இருத்தல், நஷ்டமான நிலை தோன்றுதல், மனதில் சோகநிலை,பொருள்சேதம், நல்லவர்சேர்க்கை, எதிர்நீச்சல், உற்சாகம், தூர இடச்செய்தி கிட்டுதல்,இடைஇடையே சிறுசிறு மனஸ்தாபம் தோன்றி மறைதல், அகாலபோஜனம், வீட்டில் இருக்காமல் வெளியில் திரிதல், வியாபாரம்,குழுக்கள்,கோஷ்டிகள் என சம்பந்தப்படுதல், இடையில் மனச்சந்தோசம், தனலாபம், சுற்றத்தவர் நண்பர்வருகை, கருமங்களை சாதித்தல், பெண்கள் தொடர்பு இருத்தல் போன்ற பலனமையும்.

**அதிர்ஷ்ட நாள்: 25,28,29 திகதிகள் அம்மன், விநாயகர் தெய்வ வழிபாடு நன்று.**



**சிம்மராசி:**

இருக்கும் நிலைகளில் மாற்றம், பணவரவுகள் கிடைத்தல், குடும்பசுகம் இருத்தல், தேகசுகம் இடையிடையே பாதிப்புறுதல், வாக்குவாதநிலை காணப்படுதல், சிலருடன் பேட்டி,உரையாடல்கள் இருத்தல், சுகபோஜனம், எடுக்கும் கருமங்கள் சாதகமான பெறுபேறுகள் காட்டுதல், திருடர் பயமிருத்தல், அரச அதிகாரிகள் சந்திப்பு இருத்தல்,இடையிடையே பணத்தட்டுப்பாட்டு நிலை, தலைவலி,மனத்துயரம்,சிலதீயகுண நண்பர்சேர்க்கை, வீண்செலவுகள், சாப்பாட்டில் கவனம் இல்லாமை போன்ற பலன்கள் அமையும்.

**அதிர்ஷ்ட நாள்: 27,28,29 திகதிகள் சூரியநமஸ்காரமும், சிவன் தெய்வவழிபாடும் நன்று.**



**கன்னிராசி:**

செய்கருமங்களுக்கு சில கெடுதல் இருத்தல், இலாப, நஷ்டம் மாறி, மாறி அமைதல்,இன,சன,பந்துக்கள் சேர்தல், நோய்ப்பிணியால் மனத்துயரம் பெறுதல், பிரயாணம் மேற்கொள்ளல், புதிய முயற்சிகளுக்கு அடித்தளமிடல்,பெண்கள் சிலரால் சுகம் கிடைத்தல், நல்ல சுபமான செய்தி கிடைக்கப்பெறுதல், பலரது நட்புக்கள் இருந்துவருதல், சுகபோஜனம் கிடைத்தல், மனச்சந்தோசம்,சில பெரிய மனிதர் சந்திப்பு காணப்படுதல், மனச்சஞ்சலம் ஏற்படுதல், வார இறுதியில் நல்ல உற்சாகம், தனலாபம், ஆடைஅணிகலன் சேர்க்கை என்பன அமையப்பெறும்.

**அதிர்ஷ்ட நாள்: 26,27,28, திகதிகள் மகாவிஷ்ணு, ஆஞ்சநேயர் வழிபாடுகள் நன்மை.**



**துலாம்ராசி:**

இருக்கும் நிலைகளில் மாற்றம், தேகசுகம் பாதிக்கப்படல், பிரயாணங்களில் சுகப்பலன் இருத்தல், சிறுசிறு நஷ்டம் இன்றி மறைதல், அகாலபோஜனம், பெரிய மனிதர் சந்திப்புக்கிட்டுதல், முயற்சிக்குப்பலன் இருத்தல், தூரச்செய்தி கிட்டுதல், அழகியல் சம்பந்தப்படுதல், சுற்றத்தவர், நண்பர்கள் வருகை காணப்படுதல், தொலைத்தொடர்பு இருந்துவருதல்,பெண்கள் சவகாசம் கிட்டுதல், பொருட்கள் பொருட்கள் காணாமல் போனவை கிடைத்தல், சில முயற்சிகளில் வீண்சிரமம் அடைதல், மற்றும் மனச்சஞ்சலம், அலைச்சல் என்பனவும் காணப்படுதல்.

**அதிர்ஷ்ட நாள்: 24,27,28 திகதிகள் துர்க்கை வணக்கம் நன்மை. சனீஸ்வரர், ஆஞ்சநேயர் துணையும் பெறுக.**



**விருச்சிகராசி:**

குடும்பசுகம், பிரயாணங்களில் நன்மை, தனலாபம், ஆடை அணிகலன்கள் சேர்த்தல், ஊக்கம் இருத்தல், அலைச்சல்கள் இருந்து வருதல், எதிர்பார்த்தவை சேர்தல், பெரிய மனிதர்களை சந்தித்தல், எதிர்பாராத செலவுகள் காணப்படுதல்,திருடர்களால் தொல்லைப்படுதல்,இன,சன,பந்துக்கள் வருகை, போஜனசுகம், வாகனசுகம், பெண்கள் ஆதரவு,கடன்பயம்,எதிர்பாராத கெடுதிவந்து சேர்தல்,இடையிடையே கஸ்டம், நஷ்டம் மற்றும் தொழில்விருத்தி, கடல்கடக்கும் பயணச்சந்தர்ப்பம்,வேண்டாத இடமாற்றம் என்பனவும் காணப்படும்.

**அதிர்ஷ்ட நாள்: 27,28,30 திகதிகள் முருகன், வைரவர் வணக்கம் நன்மை. சனீஸ்வரர், ஆஞ்சநேயர் வழிபாடும் துணை செய்யும்.**



**தனுசுராசி:**

தேகசுகம் கிடைத்தல்,பெண்கள் ஆதரவு,உதவிகள்,தொழில்விருத்தி, போஜனசுகம், சிறுசிறு சச்சரவுகள் தோன்றிமறைதல், புதிய முயற்சிக்குத்தடை, இடையிடையே கண், வயிறு,தலை போன்ற உறுப்புக்களில் நோய், குடும்ப சுகம் அனுபவிப்பு, எதிரியை வெற்றி கொள்ளல், மனப்பயம், தாயார் உடல் நிலை பாதிப்பு,இடம் மாறுதல், பதவியை விட்டு விலகுதல், நோய்கள் குணம் பெறுதல், வீண் விரயம், கடன் தொல்லை போன்றவை அமையப் பெறும்.


**அதிர்ஷ்ட நாள்: 27,28,30 திகதிகள் தெட்சணாமூர்த்தி, சிவன் தெய்வ வழிபாடுகள் நல்லது. சனீஸ்வரர், அஞ்சநேயர் துணையும் வேண்டுக.**



**மகரராசி:**

முயற்சிக்கு தடை, நோய்பிணி துயரம், பயவுணர்வு, தந்திரம் மந்திரம் மூலம் கெடுதியைச் சந்தித்தல், பணவரவு, தேகசுகம், குணம் பெறுதல். எதிர்பார்த்த கருமங்களில் தோல்வி சிறுசிறு பிணக்குகள் தோன்றி மறைதல், இலாபம் ஈட்டுதல், மனச்சந்தோசம், பணவிரயம் திடீர்நிலையில் ஏற்படுதல், பிரயாணம் எச்சரிக்கை, வார இறுதியில் சௌக்கியம், பலவழிகளிலும் நன்மை என்பன அமையப்பெறும்.

**அதிர்ஷ்ட நாள்: 26,28,29 திகதிகள் சனீஸ்வரர், அஞ்சநேயர் வழிபாடு நற்பலனுக்கு உதவும்.**



**கும்பராசி:**

நோய், பிணி, துன்பம், பணவரவு, போஜனசுகம், வழக்குகள், பிணக்குகள், சச்சரவுகளில் சிக்குப்படுதல், பதவி மாற்றம், தொழில்மாற்றம், கருமங்கள் சிலவற்றுக்குத் தடை, எதிர்பாராமல் சில நஷ்டங்கள் வருதல், ஆபத்து, விபத்துக் குறித்து எச்சரிக்கை தேவை, அபகீர்த்தி, செலவு, வார இறுதியில் உடல் நலம் தேறுதல். கல்விசார், தொழில்சார் முயற்சிகளில் வெற்றி கிட்டுதல் செய்தொழில் மேன்மை மற்றும் தன, தானிய இலாபம், பெண்களால் சில முன்னேற்றமும் அமையப்பெறும்.

**அதிர்ஷ்ட நாள்: 26,28,29 திகதிகள் சனீஸ்வரர், அஞ்சநேயர் வழிபாடு நற்பலனுக்கு உதவும்.**



**மீனராசி:**


வார ஆரம்பம் கருமங்களில் தடங்கல் பின்னர் சுகம் கிடைத்தல் தேகசுகம் முன்னேற்ற நிலை இருத்தல். குடும்பசுகம் நன்றாய் அமைதல். ஆடைஆபரண சேர்க்கை, கடல்கடக்கும் பயண எதிர்பார்ப்பு நிறைவேறல், பண விரயம், ஆபத்து, விபத்து, நஷ்ட நிலைகள் காணப்படுதல் சிலரைப் பகைக்கும் நிலை, வார இறுதியில் கருமங்கள் திருப்தியாய் முடிவுறுதல் மனச்சந்தோசம் மற்றும் பணவரவு ஆதாயம் என்பனவும் அமையும்.

**அதிர்ஷ்ட நாள்: 27,28,30 திகதிகள் தெட்சணாமூர்த்தி, சிவன் தெய்வ வழிபாடுகள் நல்லது.**


மீனம் பூரட்டாதி 4ஆம் பாதம் உத்திரட்டாதி ரேவதி மேஷம் ரிஷபம் அசுவினி கிருத்திகை 2,3,4 ஆம் பாதம் பரணி ரோகிணி கிருத்திகை 1ஆம் பாதம். மிருககசிர்ஷம் 1,2,ஆம் பாதம் மிதுனம் மிருககசிர்ஷம் 3,4ஆம் பாதம் திருவாதிரை புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம் கும்பம் அவிட்டம் 3,4 ஆம் பாதம் சதயம் பூரட்டாதி 1,2,3,ஆம் பாதம் மகரம் உத்திராடம் 2,3,4,ஆம் பாதம் திருவோணம் அவிட்டம் 1,2,ஆம் பாதம் ராசி மண்டலம் கடகம் புனர்பூசம் 4 ஆம் பாதம் பூசம் ஆயிலியம் சிம்மம் மகம்பூரம்உத்தரம்1ஆம்பாதம்தனுசு மூலம் பூராடம் உத்திராடம் 1,ஆம் பாதம் விருச்சிகம் துலாம் விசாகம் 4ஆம் பாதம் சித்திரை 3,4 ஆம்பாதம் அனுஷம் சுவாதி கேட்டை ஷ்விசாகம் 1,2,3 ஆம் பாதம் கன்னி உத்தரம் 2,3,4ஆம் பாதம் ஹஸ்தம் சித்திரை 1,2 ஆம் பாதம்.



வவுணதீவு பிரதேசெயலக பிரிவில் உள்ள 24 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற்கு சுயதொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்வின் எழுச்சி திணைக்களம் இந்த உபகரணங்களை வழங்கியது.







ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



# தென்னைகளுக்கிடையிலான மூடுபயிர்கள்

மண்ணரிப்பினைத் தடுக்கும் எந்தப்பயிரும் "மூடுபயிர்கள்" எனப்படும். தென்னந்தோட்டங்களில் மண் மற்றும் நீர் பாதுகாப்பில் அவரை இனத் தாவரங்கள் மூடுபயிராகப் பயன்படுத்தப்படுவது மிகவும் பயன் உள்ளதாக அமையும்.

மூடுபயிர்கள் வளர்ப்பதனால் ஏற்படும் நன்மைகள்.

- மண் அரிப்பைத் தடுக்கும்.
- களைகளைக் கட்டுப்படுத்தும்.
- பெரிய அளவில் சேதனக் கழிவாகவும், பத்திரக் கலவையாகவும் தொழிற்படும்.
- மண்ணின் பௌதீக, இரசாயன இயல்புகளை மேம்படுத்தி மண் வளத்தினைக் கூட்டுகின்றது.
- இது மண் அமைப்பையும், நீர் ஊடுருவலையும் தடுத்து வருவதுடன் ஈரப்பதன் காத்தலிலும் உதவுகின்றது.
- மண் வெப்பநிலையைக் குறைக்கும்.
- கனிப்பொருள் வெளியேற்றத்தினைக் குறைக்கும்.
- இவற்றின் வேர் முடிச்சுக்களில் வளியிலுள்ள நைதரசனை மண்ணின் பற்றீரியா செயற்பாடு காரணமாக மண்ணின் நைதரசனைப் பாதிக்கின்றது.
- மூடுபயிர்கள் மண் மேற்பரப்பிற்கு பாதுகாப்பாக இருப்பதுடன் ஆழமான வேருள்ள தோட்டப்பயிர்களுடன் ஈரத்திற்கு போட்டியிடமாட்டாது. அத்துடன் தென்னந்தோட்டங்களின் நுண் சூழலை மாற்றியமைக்கின்றது.
- இவை வரண்ட காலங்களில் உலர்ந்து, மீண்டும் மழையின் போது முளைத்து வித்துக்களை உருவாக்கும்.

பொருத்தமான மூடுபயிர் ஒன்றின் குணாதிசயங்கள்.

- விரைவில் வளர்ந்து குறுகிய காலத்தில்மண்ணை மூடிக்களை களைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- இது வரட்சிக் காலத்தில் வாடுவதுடன் ஈரப்பதனுக்குப் போட்டியிடாதுஇருத்தல்வேண்டும். பின்பு மழையின் போது மீள விருத்தியடைவதுடன் விதைகளையும் உற்பத்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- நிழலினைச் சகித்துக் கொள்வதுடன் பெருமளவு ஈரக்காப்பினை வழங்கும்.

### சிபார்சு செய்யப்பட்ட மூடுபயிர்கள். (Recommended cover crops)

மூடுபயிர் இடத்தின் காலநிலை, மண்தன்மை மற்றும் நிலத்தின் நிழல் கிடைக்கும் அளவு என்பவற்றினைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும். உலர்வலயத்தின் மூடுபயிர்கள் வரண்ட நேரத்தில் கருகுகின்றன. அல்லது வாடுகின்றன. பெருமளவு இலைச் சருகுகள் மண்ணுக்குள் சேர்ந்து பின்னர் மழைக்காலம் தொடங்கும் போது மீள உருவாகுகின்றன.

படரும் மூடுபயிர்கள். (creeping cover crops)

*(ஈரவலயம், ஈரஇடைவெப்பவலயம்)*

*01.* பியூரேறியா பசியோலொய்ட்ஸ் *(பியூரோ)* pueraria phaseoloides (peuro)

*02.* கலப்பகோணியம் மியூகுநோயிய்டிஸ் *(கலபோ)* caloopagoniam mucunoides(calopo)

*03.* செனறோ சீமா பியூபசென்ஸ் *(சென்றோ)* centrosema pubescens (centro)

வரண்ட வலயத்திற்கான சிபார்சு *(வரண்ட, வரண்ட இடைவெப்ப வலயம்)*

*01.* சென்றோ சீமா பியூபகென்ஸ் *(சென்றோ)* centrosema pubescens (centro)

*02.* மெக்ரோப்ரிலியம் எட்டோபியூரம் *(சிராற்றே)* macroptilium atrourpureum (siratro)

கலப்பக்போணியம், பியூரேறியா வரண்ட இடைவெப்பவலயத்திற்கு உகந்த மூடுபயிர் ஆகும்.

மியூகுணாயூற்லிஸ் mucuna utillis சிங்களத்தில் வண்டுரூ-மீ wanduru me

இது *34* மாதங்களுக்குள் நிலத்தனை விரைவில் மூடுகின்றது. நிலத்தினை புனருத்தாபரணம் செய்வதற்கு குறிப்பாக மீள்நடுகை மேற்கொள்ளப்படுவதற்கு முன் செழிப்பற்ற மண்ணில் சிறந்த மூடுபயிராகவும் தொழிற்படுகின்றது.

### சிபார்சு செய்யப்பட்ட மூடுபயிர்களின் தன்மை.

*01.* பியூரேறியா பசியோலொய்ட்ஸ் pueraria phaseoloides (peuro)

பியூரேறியா பசியோலொய்ட்ஸ் இன் படம்.

ஆரம்பத்தில் பியூரேறியா ஜவானிக்கா என அழைக்கப்படும். கொடி அல்லது படரும் பின்லாந்து தாவரம் ஆகும். பெரிய வீரியமான படரும் வேர்கள் மற்றும் கணுக்களிடமிருந்து காணப்படும். வேர்கள் என்பவற்றினால் உருவாக்கப்படும். ஆழமான ஒன்று திரண்ட வேர் வலையினால் பரம்பலடைகின்றன. இலைகள் மூன்று பெரியவட்டமான மயிர்களைக் கொண்ட சிற்றிலைகளைக் கொண்டிருக்கின்றன. உருளை வடிவான விதைப்பைகளையுடையது விதைப்பைகள் ஒழுங்கற்ற முறையில் முதிர்வடைகின்றன. விதைகள் சிறியவை நீள் சதுரமானவை. கடுங்கபிலநிறமுடையதும், பூச்சித்தாக்கத்திற்கு உள்ளாகக் கூடியவைகளாகவும் காணப்படும் குறைந்த முளைதிறனை கொண்டவை. இந்த முளை பயிர் களிமண் இரவல் மண்ணுக்கு பொருத்தமானதாகும்.

இவ் இனங்கள் வெட்டுத்துண்டங்கள் மூலமும் விதைகளிலிருந்தும் இனப்பெருக்கம் செய்யக்கூடியவை விரைவாக வளர்ந்து *912* மாதங்களில் அடர்த்தியான தடிப்பான படையாக உருவாகின்றது. வரண்ட நேரத்தில் இருந்து மீண்டும் மழை வீழ்ச்சிக்குப் பின்பு துளிர்க்கின்றது

*02.*கலப்பகோணியம் மியூகு நொய்டிஸ் *(கலபோ)* caloopogoniam mucunoides (calopo)

### கலப்பகோணியம் மியூகு நொய்டிஸ் படம்.

இது ஒரு கொடியாகவும் படரும் பல்லாண்டுத் தாவரமாகவும் பொதுவாக "பியூரோ" கொடியினைப் போன்று தோற்றமளிக்கும். இலைகள் *3* நீள்வட்டமான சிற்றிலைகளைக் கொண்டவை. கணுக்களிடமிருந்து காணப்படும் வேர்கள் சிறிய நீல நிறப்பூச்சுக்கள், கபில நிற ஒடுங்கிய மிருதுவான கபில நிற மயிர்களினால் மூடப்பட்ட விதைப்பைகள், தட்டையாக்கப்பட்ட சதுர வடிவிலான மென்மையான கபிலநிறம்கொண்ட விதைகள் ஆகக் காணப்படும். இவ் இனங்கள் வெட்டுத்துண்டங்கள், விதைகளிடமிருந்து இனப்பெருக்கம் செய்ய முடியும். *68* மாதங்களில் தடிப்பான படையினை உருவாக்குகின்றது. நிழலினை சகித்து வளரும். அடிக்கடி ஏற்படுகின்ற வரட்சியினால் மூடுபயிர்கள் படக் கூடும். கால்நடைகள் விரும்பி உண்ண முடியாதவை.

*03.*சென்றோ சீமா பியூப்செனஸ் *(சென்றோ)* centrosema pubescens (centro)

### சென்றோசீமா பியூப்செனஸ் படம்

இது நீண்ட தண்டு கொண்ட படரும் ஒரு பல்லாண்டுத் தாவரம் ஆகும். அடிக்கட்டி கணுக்களில் இருந்து வேர் உண்டாக்கிப் படரும் கூர் நுனி கொண்ட *3* முட்டைவடிவ சிற்றிலைகளைக் கொண்டது. விதையிலைகள் கடும் கபில நிறமான நீண்ட கூர் நுனி கொண்டவை. விதைகள் பெரிய தட்டையான கடினமான கபில நிறமாகக் காணப்படும். முதிர்ந்த சென்றோ சீமா நிழலினைச்சகித்து வளரக்கூடியது. இது வரட்சியான நேரத்திலும் முழுமையாக இறக்காது. பெருமளவில் இலைச் சருகுகளைச் சேர்க்கக் கூடியது. சில சமயம் இறப்பு நிகழுமாயின் மழையின் பின்னர் மிக விரைவாக துளிர் விட ஆரம்பிக்கும்.

இவ் இனங்களை கால் நடைகளினால் உணவாக உட்கொள்ள முடியும். மிக விரைவாக வளரும். பியூரோ,கலபோ மூடுபயிர்களுடன் இணைந்து வளர்ப்பதற்கு பொருத்தமானது ஆகும்.

*04.*மக்ரோப்ரிலியம் அற்ரோபிபேரியம் *(சிற்றோ)* macroptillium atropureum (siratro)

### மக்ரோப்ரிலியம் அற்ரோபிபேரியம் படம்

இவ் இனங்கள் நிலக்கீழ்த்தண்டுகளைக் கொண்டுள்ளன. மற்றும் கணுக்களிடமிருந்து வேர்கள் உண்டாகின்றன. *3* விசாலமான சிற்றிலைகளைக் கொண்ட இலைகள் விசேடமாக மேற்பரப்பில் வெள்ளி நிறம் சார்ந்த சாம்பல் நிற மிருதுவான மயிர்களைக் கொண்டிருக்கும். ஒடுங்கிய நீண்ட உருளை வடிவான விதைப்பைகள் இரண்டினைக் கொண்டிருக்கும். இங்குமிங்கும் சிதறலாக முதிர்ச்சி அடைந்த விதைகள் காணப்படும். எந்த உதவியும் இன்றி பரம்பலடையக் கூடியவிதைகளை இவ் மூடுபயிர்கள் கொண்டிருக்கும்.

இது கால்நடைகளினால் விரும்பி உண்ணப்படும் தாவரம் ஆகும். மழைவீழ்ச்சி குறைவாகஇருந்தாலும், இலைச்சருகுகள் சேர்வதனால் வரட்சியினை சகித்து செழிப்பாக வளரும். புல்லினத்தாவரங்களுடன் இணைந்து மூடுபயிராக வளர்க்கலாம்.

### மூடுபயிர்களை நடுதல்.

- தரை உழப்பட்டு சட்டிக் கலப்பை கொண்டு உழுது நில மட்டமாக்கப்படல் வேண்டும்.
- மூடுபயிர்களின் விதைகளை சிறிதளவு சூடான நீரில் *3* நிமிடங்கள் அமிழ்த்தி எடுக்கவேண்டும். பின்பு, குளிர்ந்த தண்ணீரில் *1224* மணித்தியாலங்கள் உளறவிட வேண்டும்.
- பின், உடனடியாக விதைகள் வரிசைக்குள்ள இடைவெளி *60*cm தூரத்திலுள்ளவாறு பகுதி முழுவதும் விதைக்கலாம். ஒரு ஹெக்டருக்கு *50*kg விதைகள் தேவைப்படும். அதன் அளவு விதைக்கும் முறையில் தங்கியுள்ளது.
- மூடுபயிர் பொச்சுமட்டைக் குழிகள் தும்புச்சோற்றிக் குழிகள் அகழிகளுக்கு மேலே பயிரிடலாம்.

### மூடுபயிர் முகாமைத்துவம்.

மூடுபயிரினை நடப்பட்டதன் பின் இவை வரிசையில் வளர்க்கதற்கு இடம் கொடுக்கக் கூடாது. சென்றோ சீமாவும், சிராந்ரேவும் மாடுகளினால் விரும்பி உண்ணப்படுகின்றன. கலப்பகோணியத்தினை குறைந்தளவே விரும்புகின்றன. எருமைகள் எல்லாவிதமான மூடுபயிர்களையும் சாப்பிடுகின்றன.

மூடுபயிர்களைப் பராமரிக்கும் போது ஒன்றுவிட்டு ஒரு நிரைகளை பராமரிப்புச் செய்ய வேண்டும். முழுக்காணியையும் பராமரிப்புச் செய்ய வேண்டியதில்லை. மலைப்பாங்கான நிலங்களில் பராமரிக்கப்படும் நிரைகள் சம உயரக்கோட்டில் இருத்தல் வேண்டும். இம் மூடுபயிர்கள் வளர்ந்த தென்னை மரங்களின் பசளை வட்டத்தினுள் வளருவதற்கு ஏற்ற வகையில் இருத்தல் வேண்டும்.



# நடிகர்களின் நம் ஊர் காதலிகள்

மான்ஸி

தென்னிந்திய திரைப்படமொன்று வெளியாகும் சம நேரத்தில் இலங்கையிலும் வெளியாகிவிடும். இலங்கையில் படம் வெளியானால் என்ன செய்தி வரும்?

இளைஞர்கள் பாலாபிசேகம், ரிக்கெட் வாங்க அடிதடி, ரசிகைகளுடன் ஏடாகூடம் என்பது மாதிரியான செய்திகள் வரும். சமூக வலைத்தளங்களில் சிலர் நல்ல படங்கள் அப்லோடுவார்கள். நாற்பது பேருக்கு மேலாக நீந்திச் சென்று ரிக்கெட் வாங்கும்போது, முதல்நாள் இரவே ரிக்கெட் வரிசையில் படுத்திருக்கும் போது, முதல்காட்சியை இருட்டில் மொபைலில் படம் பிடித்தென அவரவருக்கு முடிந்த விதத்தில் படங்கள் அப்லோடுவார்கள்.

இந்த செய்திகள், சமூகஊடக செயற்பாடுகளை பார்க்கும்போது பலரும் ஒரு முடிவிற்கு வருவார்கள், பயல்கள்தான் மிக மோசம் என. அவர்கள்தான் சினிமா மோகம் பிடித்து அலைகிறார்கள் என.

மக்கள்ஸ்... இதைப்பார்த்து ஏமாந்து விடாதீர்கள். வெளுத்ததையெல்லாம் பாலென நம்பிவிடாதீர்கள். வீட்டுக்கு தெரியாமல் காதலனுடன் தியேட்டருக்கு செல்லும் நமது பெண்களை விட மற்றவர்கள் எப்படி சினிமா மோகத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அறிய தொடர்ந்து படியுங்கள்.

படம் ரிலீஸ் ஆனதும் கதை நல்லாயிருக்கா, கிளைமாக்ஸ் நல்லாயிருக்கா, இயக்கம் நன்றாக இருக்கிறதா, சங்கர் படமா, ராஜமௌலி படமா என்பதை வைத்துத்தான் படம் பார்ப்பதா விடுவதா என்பதை முடிவு செய்வார்கள். ஆனால் நமது பெண்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா?

கதை நன்றாக இருக்கிறதா? இயக்கம் நன்றாக இருக்கிறதா? அது கழுதை கிடக்கட்டும். யார் படம் என சொல். சூர்யாவா? விஜயா? ஆதர்வாவா?. இதைப்பார்த்துதான் ஆலாய் பறக்கிறார்கள்.

பிடித்த நாயகனின் படம் என்றால் கூடப்பிறந்தவனின் கதை கந்தல் நாளெல்லாம் நச்சரித்து ஒரு சிடி வாங்கி வீட்டிலிருந்தே பார்ப்பார்கள். நமது பெண்களின் மனங்கவர் நாயகர்கள் சூர்யா, விஜய், அதர்வா, ஜீவா, சித்தார்த் என்கிறார்கள். (கொஞ்சம் அழகாக இருந்துவிட்டால் இதுதான் தொல்லையென யாரப்பா அங்கு முணுமுணுப்பது)

திரைப்பட நாயகர்களிற்கு ஈடாக இப்பொழுது தொடர் நாயகர்களும் நமது பெண்களை வளைத்துப் போட்டுவிட்டார்கள் என்ற அதிர்ச்சி தகவலை பையன்களில் காதில் இப்பொழுதே போட்டு வைக்கிறோம். 'இது காதலா' தொடர் நாயகன் அஸ்வினை மனதில் பச்சைகுத்திக் கொண்டு நிறையப்பெண்கள் உள்ளனராம். அதுபோல 'காதல் முதல் கல்யாணம் வரையில்' அர்ஜுனுக்கும் மனதில் கோயில்கட்டியவர்கள் அனேகராம்.

இதெல்லாம் மனதுக்குள் கற்பனையில், இராத்திரி கனவுடன் முடிந்துவிடும் சங்கதியல்ல என்பது தான் நமது பையன்களிற்கு வயிற்றைகலக்கும் சங்கதி. புடித்த திரை நட்சத்திரங்களிற்காக நமது பெண்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள் என்பது தெரியுமா?

படித்த ஹீரோவின் படத்தை படுக்கையறைக்குள் ஒட்டி வைக்கும் பெண்கள் அனேகர். முன்னர் இந்திய அணி வீரர்களின் படங்கள் நமது பெண்களின் படுக்கையறைகளை அலங்கரித்ததல்லவா? அப்படித் தான் இதுவும். 'என்னம்மா... எல்லாரும் சாமிப்படத்தைதான் ஒட்டுவார்கள். நீங்கள் சினிமா ஹீரோ படத்தை ஒட்டி வைத்திருக்கிறீர்களே' எனக் கேட்டால், 'டெய்லி அவனை பார்த்தாதான் நமக்கென்று வாறவன் கொஞ்சமாச்சும் அவன் சாயலில் வருவான்' என நம்பி ஒட்டுகிறார்கள்.

ஒருத்தி தோழியை கேட்டாளாம் 'ஏன் அஜித் படத்தை எப்பொழுதும் கொண்டு திரிகிறாய்' என்று. அதற்கு தோழி சொன்னாளாம் 'எனக்கு வாரவர் கொஞ்சமாச்சும் அஜித் போலவரட்டும்என்றுதான் வச்சிருக்கின்றன்' என. இதை கேட்டு ஆடிப் போகாமல் முதலாமவள் சொன்னாளாம் 'அதெல்லாம் சரி. அஜித் உனக்கு வாரதென்றால் நீ கொஞ்சமென்றாலும் சாளினி மாதிரியெல்லோ இருக்க வேணும்' என்று. (அப்பாடா... இப்பதான் நமது பையன்களிற்கு ரிலாக்ஸ் ரைம்)

ஹீரோக்களின் பிறந்தநாள் என்றால் ஊரில் A/L படிக்கும் ரீயூசன் பெண்களின் புத்தகப்பைகளுக்குள் கொப்பி புத்தகம் இருக்காது. சொக்லேட்தான் இருக்கும். அம்மாவிடம் வீட்டில் சொல்வது 'ரியூட்டுக்கு காசு வேணும்' என்று. ஒரு வாரத்திற்கு முன்பே காசு வாங்கி சேர்த்து வைத்துவிடுவார்கள். பிறந்தநாள் அன்று பாடசாலை, ரியூசன் போகும் வழியில் உள்ள கடையொன்றின் வீதியோரமாக நின்று ஆளுக்கொரு யூஸ் பைக்கற்றோ, ஐந்து ரூபா ரொபியோ எடுத்து கொண்டாடுவார்கள். பேஸ்புக் வைத்திருப்பவர்களின் புரபைல் பிக்சர் நிச்சயம் ஹீரோவின் புதுப்பட போஸ்தான்.

ரியூசன் முடிந்து, வேலை முடிந்து பஸ்ஸில் வந்திறங்கி அவசர அவசரமாக வீடு திரும்புபவர்களில்; குறிப்பிடத்தக்கவர்களின் பின்னால் இன்னொரு கதையுள்ளது. அவர்கள் வீட்டிற்கு சென்று குத்துவிளக்கேற்றப் போகிறார்கள் என அப்பாவியாக நம்பினால் நீங்கள் பாவம். சீரியல் தொடங்கப் போகிறதாம்.

அஸ்வின், அர்ஜுன் திரையில் தோன்றும் முதல்காட்சியையும் மிஸ் பண்ணிவிடக்கூடாதென்பது அவர்களின் அங்கலாய்ப்பு. அவர்களின் பேஸ்புக்கை பார்த்தால் பூனைக்கண் அஸ்வினோ, பூச்சாண்டி காட்டும் அர்ஜுனோ நிச்சயம் இருப்பார்கள். இப்படி கற்பனையில் இருந்தால் அஸ்வின் அல்லாவிட்டாலும் அவுஸ்திரேலியா மாப்பிள்ளை யாவது கிடைப்பார் என்பது நமது பெண்களின் நம்பிக்கை.





மடு கல்வி வலயத்திற்குட்பட்ட வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புதிய கட்டிட தொகுதியொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 8.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டிடத்தை வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் திறந்து வைத்தார்.



## மாட்டுப் பெண்!

ஜல்லிகட்டு விவகாரத்தில் லேட்டஸ்ட்டாக சிக்கியிருப்பவர் த்ரிஷா. ஜல்லிக்கட்டு மிருகவதையென கூறி, நீதிமன்றத்தில் தடை வாங்கியது 'பீட்டா' என்ற விலங்குகள் நல அமைப்பு. அந்த அமைப்பின் தமிழக தூதராக இருப்பவர்தான் த்ரிஷா. இதுதான் ஜல்லிக்கட்டு ஆதரவாளர்களின் கோபம் த்ரிஷா பக்கம் திரும்பியதன் காரணம். 'பீட்டா' தூதர் பதவியை த்ரிஷா துறக்க வேண்டுமென்ற கோரிக்கையும் எழத் தொடங்கியுள்ளது.

## ரிஸ்க் விஜய்

ரிஸ்க் எடுப்பதெல்லாம் விஜய்க்கு ரஸ்க் சாப்பிடுவதைப் போல என்கிறார் 'தெறி' இயக்குனர் அட்லி. 100 அடி உயரத்தில் இருந்து தண்ணீருக்குள் குதிப்பதைப் போன்ற காட்சியொன்றில் டூப்பை தயார் செய்த போதும், விஜய் அதை நிராகரித்துவிட்டாராம். தத்ரூபமாக இருக்க வேண்டுமென கூறி தானே அந்த காட்சியில் நடித்தாராம். 'விஜயின் முடிவு எங்களிற்கு அதிர்ச்சியாக இருந்தது. என்றாலும் அவர் ஏற்ற பொலிஸ் பாத்திரத்தில் நிறைய ரிஸ்க் எடுத்து அசத்தியுள்ளார். இதுவரை பார்க்காத பொலிசாக இதில் அவரை பார்ப்பீர்கள்' என்கிறார் இயக்குனர்.

## தாவூத்தின் தங்கச்சி!

தாவூத் இப்ராஹிமின் சகோதரி ஹசீனாவின் வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகவுள்ள படத்தில் நடிக்க சோனாக்ஷி சின்ஹா ஆர்வமாக உள்ளாராம். 1993 மும்பை தொடர்குண்டு வெடிப்பில் தேடப்பட்டு வந்த தாவூத் தப்பி வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். மும்பையில் வசித்து வந்த சகோதரி அண்மையில் மரணமானார். அவரது வாழ்க்கையை மையமாக கொண்டு உருவாகும் படத்தில் நடிக்க சோனாக்ஷி சின்ஹா தேர்வாகியுள்ளார். 'இப்படியான வேடத்தை இதற்கு முன்னர் ஏற்றதில்லை. இது சவாலான காரியம்தான்' என்றுள்ளார்.

## டூரிங் டாக்கீஸ்



## தமிழ் பையனையும் கட்டுவேன்!

சினிமாவிலும் பெண்களிற்கு சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என கொதித்துள்ளார் கத்தரின் தெரசா. 'இப்பொழுது கதாநாயகிகளிற்கு முக்கியத்துவம் மிக்க படங்கள் வரத் தொடங்கியுள்ளன. மாயா அதற்கு நல்ல உதாரணம். நடிகர்களிற்கு இணையாக நடிகைகளிற்கும் சம்பளம் வழங்கப்படும் காலம் வரும்' என்றுள்ளார். இந்த சமயத்தில் 'தமிழ் இளைஞனை திருமணம் செய்து கொள்வீர்களா?' என ஒருவர் குண்டக்கமண்டக்க கேள்விகேட்க, 'மனதுக்கு பிடித்திருந்தால் நிச்சயம் செய்வேன்' என்றுள்ளார்.



## இன்னும் ரீ வரல!

புத்தாண்டில் புதிய முடிவுகள் எடுத்துள்ளேன் என்கிறார் அனுஷ்கா. நிறைய நடித்து நிறைய சம்பாதித்து விட்டேன். அதிக பணம் தேவையில்லை. அளவாக இருந்தால் போதும். எனக்கு அடையாளம் தந்த சினிமாவிற்கு ஏதாவது திருப்பி செய்ய விரும்புகிறேன். வழக்கமான அனுஷ்காவை இனி திரையில் பார்க்க முடியாது. வித்தியாசமான வேடங்களில்த்தான் நடிக்கவுள்ளேன்' என்றுள்ளார். அத்துடன் தமிழர்களின் தலையாய சந்தேகத்தையும் தீர்த்து வைத்துள்ளார். 'சரியான நேரம், பொருத்தமான மாப்பிள்ளை வரும்போது திருமணம் நடக்கும்' என்றார்.



## 'அது'க்கு ரெடியாகலையாம்!

விசாலின் திருமணம் பிள்ளையார் திருமணம் போலத்தான் முடியும் என நினைக்க வேண்டியுள்ளது. விசாலின் பேச்சைப் பார்க்க அப்படித்தான் தோன்றுகிறது. அண்மையில், ஆர்யா பேசும்போது 'எனக்கு முன்னர் விசால் திருமணம் முடித்துவிடுவார்' என கூறினார். இதுபற்றி விசாலிடம் கேட்டால் 'நான் இன்னும் திருமணத்திற்கு தயாராகவில்லை. எனக்கு முன்னர் ஆர்யா ஒரு முடிவிற்கு வந்துவிடுவார் என நினைக்கிறேன். இந்த வருடத்திற்குள் அவர் முடிவெடுப்பார். நான் செய்வதற்கு நிறைய வேலைகள் உள்ளன' என்றுள்ளார்.



## கல்யாணம் ஆகலையாம்!

தன்னைப்பற்றி யாரோ திட்டமிட்டு வதந்திகளை அவிழ்த்துவிடுகிறார்கள் என கடுப்பாகியுள்ளார் அஞ் சலி. நடிப்பில் மட்டும் கவனம் செலுத்திவரும் தன்னை, ஒருபிள்ளைக்கு அம்மா என சொல்ல எப்படித்தான் உங்களிற்கு மனது வந்ததோ என்றும் எகிறி விழுந்துள்ளார். நல்ல கதையம்சங்கள் கொண்ட படங்களை மட்டும் தேர்வு செய்து நடித்து வருகிறேன், குத்துப்பாடலிற்கு ஆடவும் தயாராக உள்ளேன் என்றும் தாராளம் காட்டியுள்ளார்.

# வைத்தியரிடம் கேளுங்கள்





வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687

**சி.நிர்மலா (28)**
**மருதனார் மடம்.**

**கேள்வி:** எனக்கு முகத்திலும், கழுத்திலும் வெள்ளையாக தேமல் படர்கிறது. நண்பி சொல்லி ஒரு கிறீம் பாவித்தேன். பயன் இல்லை. இயற்கை மூலிகைச் சிகிச்சை இருக்கிறதா?

**பதில்:** அறுகம்புல், கஸ்தூரிமஞ்சள், மஞ்சள் , மருதோன்றி இவற்றை சிறிதளவு எடுத்து எலுமிச்சை சாறு விட்டரைத்து பூச குணமாகும்.

அல்லது வெற்றிலையோடு நான்கு உள்ளிப்பல் சேர்த்து அரைத்தும் பூசி வரலாம்.

**வாமதேவன் ( 32 )**
**வேலணை**

**கேள்வி:** வழமையாகவே எனக்கு பனிக்காலம் ஒத்துவருவதில்லை. தொண்டைஅரித்து இருமல் வருகிறது. குடிநீர் ஒன்று சொல்வீர்களா?

**பதில்:** திற்ப்பிலி , சித்தரத்தை, இஞ்சி, மிளகு, கண்டங்கத்தரிவேர், தூதுவளைவேர், ஆடாதோடைவேர், அதிமதுரம் , சிறுதேக்கு வகை பத்து கிறாம் வாங்கி இரண்டு போத்தல் நீர் விட்டு எட்டிலொன்றாக காய்ச்சி பனங்கற்க்கண்டு அல்லது தேன் விட்டு க்குடித்துவர குணமாகும்.

**தர்மினி (26 )**
**மல்லாகம்**

**கேள்வி:** அரச அலுவலகமொன்றில் பணி புரிகின்றேன். அடிக்கடி தடிமன், பினிசத்தொல்லைகள் ஏற்படுகிறது. அத்தோடு தற்போது உடல் எடை அதிகரிப்பதை உணர்கின்றேன். உடல் நிறை அதிகரிப்பதால் வேலைகள் செய்யும்போது மூச்சு வாங்குகின்றது. எனக்கேற்ற யோகாசன முறையொன்றை சொல்வீர்களா?

**பதில்:** வேலைக்குசெல்பவர்கள், பெண்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்ற ஆசனங்கள் பல இருந்தாலும் சூரிய நமஸ்காரமே மிகச் சிறந்ததாகும்.இது பலஆசனங்களின் அடிப்படை நிலைகளை கொண்டிருப்பதால் உடலுக்கு மிகுந்த பயனளிக்கின்றது. நீங்கள் பினிசத் தொல்லை இருப்பதாக குறிப்பிட்டுள்ளீர்கள். அத்தோடு உடற்பருமன் அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே சூரிய நமஸ்காரமே உங்கள் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு. அத்துடன் இதன்மூலம் ரத்தமும் சுத்தமாகும். செய்யும் பணியில் கவன ம் கூடும். கவனச் சிதறல் மறையும். நினைவாற்றல்அதிகரிக்கும். இதனால் உடல் ஆரோக்கியம் பலப்படும்.

அதன் செய்முறை விளக்கப்படத்துடன் விபரிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் யோகாசன ஆசிரியர் ஒருவருடன் பழகிக்கொள்வதே சிறந்த பலன் அளிக்கும் .

சூரிய நமஸ்காரம் செய்யும் முறை :

***நிலை: 1***

இரண்டு கால்களையும் ஒன்றாக சேர்த்து நேராக நிமிர்ந்து நின்று கைகளை பக்கவாட்டிலிருந்து மெதுவாக தலைக்கு மேலே தூக்கி இணைக்கும் போது மூச்சை உள்ளிழுத்து பின் மெதுவாக மார்புக்குநேராக கொண்டுவந்து நமஸ்காரம் செய்வது போன்று வரும் போது மூச்சை நன்கு வெளியிட வேண்டும்.

***நிலை: 2***

மூச்சை உள்ளிழுத்து கைகளை மேலே தூக்கி கைகள் இரண்டும் காதுகளை தொடும்படியாக கும்பிட்டு மெதுவாக பின்புறமாக உடலை வளைக்க வேண்டும்.

***நிலை: 3***

மூச்சை வெளியே விட்ட படி கால்களை இணைத்து கைகள் தரையையும் தலைமுட்டியையும் தொடும் படி செய்ய வேண்டும்.

***நிலை: 4***

முச்சை உள்ளிழுத்த படியாக வலது காலை பின்னோக்கி வைத்து இடதுகாலை முன்னோக்கி வைத்து இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி தலையை மேலே தூக்கி சில விநாடிகள் இருக்க வேண்டும்.

***நிலை: 5***

முச்சை வெளியிட்ட படி இரண்டு கால்களையும் பின்னே வைத்து இரண்டு கைகளையும் முன்னே வைத்து இடுப்பை மேலே தூக்கி வளைந்து இருக்க வேண்டும்.

***நிலை: 6***

இந்த நிலையில் மூச்சை உள்ளிழுத்து தரையில் படுத்து கைகளை மார்பிற்கு மேலே நேராக ஊன்றி கால்கள், முட்டி, மார்பு மற்றும் தாடை தரையில் படும் படியும் இடுப்புப்பகுதி மட்டும் சற்று மேலே தூக்கியும் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் சற்று நேரம் மூச்சை தற்க்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

***நிலை:7***

இந்த நிலையில் ஆசனத்தில் மூச்சை உள்ளிழுத்த படியாக தயைால்படுத்து கைகளை மார்பிற்கு நேராக வைத்து மார்பு மற்றும் முகத்தை மேலே தூக்கி முதுகை எவ்வளவு வளைக்கமுடியுமோ அவ்வளவு வளைக்க வேண்டும்.

***நிலை:8***

இதில் மூச்சை வெளியே விட்ட படியாக கைகளை தரையில் பதித்து இடுப்பு மற்றும் தலையை உயர்த்தி வளைந்து இருக்க வேண்டும்.

***நிலை: 9***

மெதுவாக மூச்சை உள்ளே இழுத்து வலது காலை முன்னே வைத்து முட்டியை மடக்கி கைகளை கால்களுக்கு பக்கவாட்டில் நேராக வைத்து தலையை மேலே தூக்கி உடலை வளைக்க வேண்டும்.

***நிலை: 10***


மூச்சை வெளியே விட்ட படி கால்களை இணைத்து கைகள் தரையையும் தலை முட்டியையும் தொடும் படி செய்ய வேண்டும்.

***நிலை: 11***

இந்த நிலை இரண்டாவதாக கூறியநிலையேஆகும். மூச்சைஉள்ளிளுத்து கைகளை மேலே தூக்கி கைகள் இரண்டும் காதுகளை தொடும்படியாக கும்பிட்டு மெதுவாக பின்புறமாக உடலை வளைக்க வேண்டும்.

***நிலை: 12***

எவ்வாறு தொடங்கினோமோ அவ்வாறே செய்து முடிக்க வேண்டும்.








யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களிற்கான பொங்கல் விழா யாழ் மாவட்ட செயலகத்தில் அண்மையில் கொண்டாடப்பட்டது.






# கள்ளின்றி அமைய வேண்டும் கிராமம்

குடி குடியை கெடுக்கும் என்பார்கள். குடி புகுந்த வீடு உருப்படாது. ஊரும் உருப்படாது. எல்லாமே கெட்டு குட்டிச்சுவராகி விடும். அதற்கு நல்ல உதாரணம் யாழ்ப்பாணத்தின் மல்லாகத்தின் கல்லாறு கிராமம்.

அந்தக்கிராமத்தில் உள்ள கள்ளுத் தவறணையொன்று கிராமத்தின் வாழ்;வுடனேயே விளையாடுகிறது. கள்ளுத்தவறணையால் கிராமத்தின் நிம்மதியே பறந்துவிட்டதென்கிறார்கள் கிராம மக்கள். கிராமத்திற்குள்ளேயே கள்ளுத்தவறணையால் பெண்கள் வயிற்றில் நெருப்பைக்கட்டிக் கொண்டிருக்கும் வாழ்க்கையே வாழ வேண்டியுள்ளதென்பதே பிரதான குற்றச்சாட்டு.

அன்றாட கூலித் தொழிலாளர்கள், கடுமையான உடல் உழைப்பாளர்கள் பலரின் உழைப்பும் கள்ளுத்தவறணை கல்லாப் பெட்டியை நிரப்புகிறது. அந்தப் பகுதியில் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதற்கு கள்ளுத்தவறணையும் ஒரு காரணமென்கிறார்கள்.

கள்ளுத்தவறணை இருக்கும்வரை ஊர் உருப்படாதென்பதை உணர்ந்த கிராமமக்கள் கடந்த 13ம் திகதி ஒன்று திரண்டு கள்ளுத்தவறணையை இழுத்து மூடியுள்ளனர். எனினும், இந்த மூடல் நிரந்தரமானதல்ல என்பதை ஊர்மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். குடிகாரர்களின் கொட்டம் தாங்க முடியாமல் அடிக்கடி போராட்டங்கள் நடத்தி கள்ளுத்தவறணையை மூட வைப்பது அங்கு அடிக்கடி நடக்கும் விடயமென்றாகிவிட்டது. சிலநாள் மூடியிருநதாலும் பின்னர் எப்படியோ அது திறந்துவிடும் என்பதை மக்கள் தெரிந்தே வைத்துள்ளனர்.

கல்லாறை கிராத்தில் சுமார் 120 குடும்பங்கள் வசிக்கிறார்கள். சுமார் 30 வருடங்களாக அங்கு கள்ளுத்தவறணை இருந்து வருகிறது. அதனால் அந்தக்கிராமத்தில் சிறுவயதிலேயே பலரும் கள்ளருந்த தொடங்கிவிடுகிறார்கள் என கவலை தெரிவிக்கின்றனர் கிராமத்து வாசிகள்.

கிராமத்து வாசிகளிற்கு என்றல்ல, அயலிலுள்ள கிராமங்களை சேர்ந்த 'குடிமக்களி'ற்கும் கல்லாறை கிராமம்தான் 'ஊற்றிக் கொடுக்கும்' கிராமம். அயல் பிரதேசங்களிலிருந்து வருபவர்கள்தான் கிராமத்தின் இயல்பான நடவடிக்கைக்கு பாதகம் செய்கிறார்கள் என்பதே பிரபல்ய குற்றசசாட்டு. இரவு 8 மணிவரை கள்ளுத்தவறணை திறந்திருக்கிறது. வெளியூரிலிருந்து வருபவர்கள் ஊருக்குள் ஆங்காங்கே முகாமிட்டு 'குடியும் குடித்தனமுமாக' வாழ்கிறார்கள்.

இந்த குடிகாரர்களால் ஊருக்குள் வீணான மோதல்கள் ஏற்படுகின்றன. இந்தக்கும்பலின் கொட்டத்தை யாராவது தட்டிக்கேட்டால் உடனே மோதலாகிறது. இரவு நேரங்களில் வீடுகளில் இருந்து படிக்கும் பெண்பிள்ளைகளின் நிலைமைதான் மிகமோசம். தகாத வார்த்தைகளை வீட்டின் முன்னால் நின்று பேசுவது, கல்வீசுவது என அவர்களின் அடாவடிகள் கொஞ்சநஞ்சமல்ல.

காணியிருந்தும் வீடு கட்ட முடியாத நிலை அங்குள்ள ஒருவருக்கு ஏற்பட்டுள்ளது. கள்ளுத்தவறணையின் பின்பக்கமாக அவரது காணி இருப்பதால் அங்கு வீடு கட்ட முடியாமல் திண்டாடுகிறார். கள்ளுத் தவறணையின் முன்பக்கம் வயல் காணிகள். எனினும், குடிகாரர் தொல்லைகாரணமாக யாரும் அங்கு விதைப்பதில்லை என்கிறார்கள்.

இப்படியாக கள்ளுத்தவறணையால் ஊரே கலகலத்துப் போயுள்ளது. இதனை நிரந்தரமாக அகற்றவேண்டுமென்பதே மக்களின் ஏகோபித்த கருத்து. மதுச்சாலைகள் மக்கள் வாழிடங்களிற்கு வெளியில் அமைய வேண்டுமென்பதே பொதுவிதி. அதனை கடைப்பிடிக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையல்லவா?

**த.விமலாதேவி**
**குடியிருப்பாளர்**


த.விமலாதேவி

இரவில் பிள்ளைகளுக்கு படிப்பிக்க முடியாமல் இருக்கிறது. குடித்து விட்டு கும்மாளம் போடுபவர்களின் சத்தம்தான் காதைப் பிளக்கிறது. வீதியிலே மலம் கழிக்கிறார்கள். எனது மகளுக்கு திருமணம் பேசி பல வருடங்கள் கடந்த நிலையில் இப்பத்தான் அது சரிவந்தது. எனது மகளைப் பார்க்க வருகின்றவர்களுக்கு எல்லாம் பிடித்துப் போக பக்கத்தில் கள்ளுத் தவறணை இருப்பதைப் பார்த்து விட்டு சம்மதத்தை தெரிவிக்காமல் சென்று விட்டார்கள். இதனால் பல வருடங்கள் கழித்துத்தான் திருமணம் செய்ய முடிந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் பார்ட்டி வைக்கிறார்கள். சாராயத்தை கள்ளுத் தவறணைக்கு உள்ளே வைத்துக் குடிக்கிறார்கள்.

**ஜ.சிற்றம்பலம்**
**குடியிருப்பாளர்**

இந்தப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் கள்ளு இறக்கின்றவர்கள் அதிகமாக இருந்ததால். இந்தக் கள்ளுத் தவறணை எமக்கு தேவைப்பட்டது. அதனால் அன்று


ஜ.சிற்றம்பலம்

எங்களால் எதிர்ப்புத் தெரிவிக்க முடியவில்லை. ஆனால் இன்று கள்ளு இறக்கின்றவர்கள் என்று பார்த்தால் இருவர் மட்டுமே இருக்கின்றனர். எனவே இந்தக் கள்ளுத் தவறணையை கூடுதலாக கள்ளு இறக்கும் இடத்திற்கு மாற்றினால் நல்லது.

**வி.வக்சலா**
**குடியிருப்பாளர்**

பெண்கள் இரவில் இந்த வீதியால் போக முடியவில்லை. இந்தக் கள்ளுத்


வி.வக்சலா

தவறணைக்கு வருகின்றவர்கள் போதையில் பெண்களைக் கண்டால் கெட்ட வார்த்தைகளால் திட்டுவதும், வீதியை மறிப்பதுமாக நிற்கின்றனர். இதனால் வேறு வீதியூடாக ஊரைச் சுற்றிவர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

**ஆ.அருள்நேசராசா**
**முகாமையாளர்**
**சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கம்**


ஆ.அருள்நேசராசா


கள்ளுத் தவறணையை மூடும் அளவுக்கு மக்களுக்குப் பிரச்சினை இல்லை. 1972 ஆம் ஆண்டு எமது சங்கத்தால் இந்தக் கள்ளுத் தவறணை திறக்கப்பட்டது. திறக்கும் போது அந்த இடத்தில் குடிமனைகள் இருக்கவில்லை. பின்னர்தான் அங்கு குடிமனைகள் தோன்றின. மதுவரித் திணைக்களத்தின் அனுமதியுடனும் பிரதேச செயலகத்தின் அனுமதியுடனும் தான் இந்த இடத்தில் கள்ளுத் தவறணை திறக்கப்பட்டது.

இந்தக் கள்ளுத் தவறணையில் கள்ளுக் குடிக்க வருகின்றவர்கள் தவறணைக்கு உள்ளே இருந்துதான் கள்ளுக்குடிக்கிறார்கள். இவர்களால் அந்தப் பகுதி மக்களுக்கு பாதிப்பு இல்லை. வெளியிடங்களில் இருப்பவர்கள் பாரில் சாராயம் வாங்கி இங்கு வந்து குடிக்கிறார்கள். அதாவது கள்ளுத் தவறணைக்கு வெளியில் இருந்து குடிக்கிறார்கள். இவர்களால் தான் பிரச்சினை எழுகிறது. அந்த மக்கள் பொலிஸில் முறையிட்டு இவர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு கள்ளுத் தவறணையை மூடச் சொல்லி எப்படி சொல்ல முடியும்? கள்ளுத் தவறணையை மூடினால் பாதிக்கப்படப்போவது எல்லோரும் தான். எங்களுக்கு அந்தப் பகுதி கிராமசேவகர் திறப்பதற்கான அனுமதியைத் தந்துவிட்டார். எனவே விரைவில் கள்ளுத் தவறணையைத் திறப்போம்.

KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி எப்பொழுதும் வீதி ஒழுங்குப்பற்றி விழிப்புடன் இருப்பார்.
பெண்களாலயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 | 021 492 3200 | 077 722 5292

# இளசுகளைக் கவரும் யமஹா!



சுட்டு
chuddu.deepam@gmail.com

நாட்டின் வேகமான வளர்ச்சி, மக்களின் இயந்திரத் தனமான வாழ்க்கைக்கு மோட்டார் சைக்கிளும், காரும் இன்றியமையாத தேவைகளுள் ஒன்றாகிவிட்டதால், நாட்டில் தற்போது இவற்றின் பாவனை அதிகரித்து விட்டது. குறிப்பாக மோட்டார்சைக்கிள் பாவனையே அதிகரித்துவிட்டது எனலாம். அதிலும், இளைஞர்கள் மத்தியிலேயே இந்த மோட்டார் சைக்கிள் அதிகம் வரவேற்பைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் ஏதாவதொரு பிரதான வீதியில் குறைந்தது ஒரு மணிநேரம் நின்று பார்த்தாலே போதும் இதை உறுதி செய்துவிடலாம். எழுபத்தைந்து வீதத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் மோட்டார் சைக்கிளிலேயே தமதுபயணங்களை மேற்கொள்கின்றனர்.

என்ன இருக்குதோ இல்லையோ ஸ்டைலா, கௌரவமா சுத்த ஒரு மோட்டார்சைக்கிள் இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள் இன்றைய இளைஞர்கள்.

மோட்டார்சைக்கிள் ஒன்றை வாங்கும் போது வெறுமனே விலையை மட்டும் பார்த்து இன்றுயாரும் வாங்குவதில்லை. பெற்றோல் பாவனை, உதிரிப்பாகங்களின் தரம், வர்ணங்கள், அழகான உடலமைப்பு, எந்தக் கம்பனியின் தயாரிப்பு என எல்லாவற்றையும் கருத்தில்கொண்டுதான் வாங்குகின்றனர். இதற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு மோட்டார்சைக்கிள் உற்பத்தி நிறுவனங்களும், காலத்திற்குக் காலம் புதிய தொழில்நுட்பங்களைக் கையாண்டு இளைஞர்களைக் கவரும் வகையில் நளினமாகவும், ஒய்யாரமாகவும் வடிவமைக்கப் பட்ட புதிய மோட்டார்சைக்கிள்களை சந்தைக்கு விடுகின்றன.

அந்தவகையில், ஜப்பான் என்ஜின்களுடனும், இந்தியாவின் உடலமைப்புடனும் உருவாகும் யமஹா (YAMAHA) நிறுவனத்தின் மோட்டார்சைக்கிள்கள் விற்பனையில் தற்போது சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கிறன. ஒவ்வொரு மொடல் மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிது புதிதாக வர்ணங்களைப் புகுத்துவதும், பக்கக்கவர்கள், கவளிகள் போன்றவற்றை வர்ணங்களில் பிரத்தியேகமாக வாங்கிப் பொருத்தும் வகையில்விற்பனை செய்வதும் யமஹா நிறுவனத்தின் சிறப்பம்சமாகும்.

**எரிபொருள் சிக்கனம்!**

யமஹா நிறுவனத்தின் மோலீட்டார்சைக்கிள்கள் அனைத்தும் எரிபொருள் சிக்கனத்தை பேணும் வகையிலேயே தயாரிக்கப்படுகின்றனவாம். இதற்கென தற்போது புதிதாக "ஸ்பிறே" தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. முன்போல் காபறேட்டர் இல்லாமல் எவ்வளவு முறுக்குகிறமோ அதற்கேற்றாற்போல் எரிபொருள் என்ஜினுள் விசிறப்படுமாம்.

**சலூட்டு 125 (yamaha SALUTO 125)**

புதிதாக களத்தில் இறங்கியிருக்கும் இந்த வகை மோட்டார் சைக்கிள் ஒற்றைச் சிலின்டரைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதால் மிகக் குறைந்தளவு எரிபொருள் பாவனை கொண்டது. ஒரு லீற்றர்பெற்றோலில் 75 கிலோ மீற்றர்வரை பயணிக்கக்கூடிய, இந்த மோட்டார்சைக்கிள் சொகுசு இருக்கைகள், முன் பின் ட்ரம் மற்றும் டிஸ்க் பிறேக்குகள், டியூப்ளஸ் டயர்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. இதன் தற்போதைய விற்பனை விலை 229,900 ரூபா.

**yamaha R15**

அதிக விலைகொண்ட இந்த வகை மோட்டார்சைக்கிள் ஹ்பான்சி மோட்டார்சைக்கிள் வரிசையில் முதலிடம் பெறுகிறது. 636,000 ரூபாவிற்கு விற்பனையாகும் இது 150CC செயற்திறன் என்ஜின் இயக்கத்தைக் கொண்டுள்ளதுடன், இருபக்க டிஸ்பிறேக், 12 லீற்றர் எரிபொருள் கொள்கலனையும் கொண்டுள்ளது.

**yamaha FZ**

Fz, Fz Version2 , Fzs எனும் வகைகளைக் கொண்ட இவை, 406,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இருபக்க டிஸ்க் பிறேக் விதவிதமான வர்ணங்களில் வெளிவந்திருக்கும் பைக்குகள் 150CC திறனைக் கொண்டுள்ளதுடன், பக்கக் கவளிகள் விரும்பிய வர்ணங்களில் மாற்ற முடியும். 1லீற்றர் பெற்றோலில் 60 கிலோ மீற்றர்வரை பயணிக்க முடியும். யாழ்ப்பாண வீதிகளில் அதிகம் வலம் வரும் மோட்டார்சைக்கிள்களில் இதுவும் ஒன்று.

**yamaha FAZER**

Fz மோட்டார்சைக்கிள் போலவே செயற்திறன் மற்றும் ஏனைய அம்சங்களைக் கொண்ட இதன் உடல் வடிவமைப்பு சற்று மாறுபட்டது. இரட்டை முன்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒரு ஸ்மார்ட் லுக் கொண்ட இவ்வகை மோட்டார் சைக்கிளை சற்று உடற்பருமனானவர்கள் ஓட்டினால்மிக அழகாக இருக்கும். விரும்பியவாறு முன் விளக்குகளின் அலங்காரங்களை மாற்றியமைக்கலாம்

**yamaha RAY**

எரிபொருள் சிக்கனம் மற்றும் டியூப்லஸ் டயர்களைக் கொண்டுள்ள இது சொகுசான பயணத்திற்கு ஏற்றது. கொம்பி பிறேக் பொருத்தப்பட்டு பல்வேறு வர்ணங்களில் வெளிவருவதால் பெரும்பாலான பெண்களின் வரவேற்பையும் பெற்றுள்ளதாம் இந்த மோட்டார்சைக்கிள்.





✎ வ.வண்டுமுருகன்




மனிதர்கள் எத்தனை வகையென்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பெற்றோர்கள் இரண்டே இரண்டுவகைதான். ஒன்று நோண்டி நொங்கெடுப்பவர்கள். மற்றது நோகாமல் நொங்கெடுப்பவர்கள். இந்த இரண்டிற்குள்ளும் சகல தமிழ் பெற்றோரையும் அடக்கிவிடலாம். எப்படியென்கிறீர்களா?

நோண்டி நொங்கெடுப்பவர்கள் என்றால், ஒன்றோ இரண்டோ பெண் பிள்ளையை பெற்றிருப்பார்கள். காலம் முழுதும் வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி பிள்ளைகளிற்காக சேமிப்பார்கள். நன்றாக படிக்க வைப்பார்கள். இருப்பதை கொண்டு கல்யாணம் கட்டி வைப்பார்கள். அடுத்தவகை, நோகாமல் நொங்கெடுப்பவர்கள். அவர்களும் கல்யாணம் காட்சி முடிந்து ஒன்றோ இரண்டோ பெண்பிள்ளைகளை பெற்றிருப்பார்கள். அந்தப்பிள்ளைகளும் பார்ப்பதற்கு கண்ணுக்கு இலட்சணமாக இருக்கும். ஆனால் நடு வீட்டில் வறுமை குந்தியிருக்கும். ஏதோ இருக்கிறம் 'ரேஞ்ச்'சில் காலத்தை கடத்துவார்கள். திடுதிப்பென ஒரு பெட்டையை கனடாக்காரனுக்கும், இன்னொருத்தியை லண்டன்காரனிற்கும் பார்சல் பண்ணிப்போட்டு, மடிப்பு குலையாத சேட் போட்டு ரிவிஎஸ் சபாரியில் கள்ளுக்குப் போகின்ற குடும்பத் தலைவன் இரண்டாம்வகை.

இந்த இரண்டாம் வகைகாரர்களால் நமது வாலிபர்கள் எதிர்கொள்ளும் பாரிய 'மனிதாபிமான' பிரச்சனையை இந்த உலகத்திற்கு புரிய வைக்கும் தலையாய கடமையை இந்த பகுதியில் செய்யப் போகிறேன். வெளிப்படையாக சொன்னால் இந்த வெளிநாட்டு மாப்பிள்ளைகளை பற்றித்தான் சொல்லப் போகிறேன்.

மூக்கில் சளி வடிய வடிய நாள் முழுதும் பையன்களுடன் அடிச்சு தொட்டு விளையாட்டு விளையாடும் பெண்பிள்ளைகள் பெரியவர்களாகி அச்சம், மடம், நாணம் மாதிரியான ஐயிற்றங்களும் மேக் அப்பும் சேர்ந்து புதிய உருக் கொள்வார்கள். அதன்பின்னர், ஏதோ அல்ப்ஸ் மலையுச்சியிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் மாதிரி பின்னேர வெயிலும் படாமல் குடை பிடித்துக் கொண்டு திரிவார்கள். பின்னர் திடுதிப்பென வெளிநாட்டு மாப்பிள்ளையை கட்டிக் கொண்டு விமானமேறுகிறார்கள். இவர்களைத்தான் 'வெளிநாட்டு பார்சல்' என சற்று கடுப்புடன் கூறுகிறார்கள் பையன்கள். இந்த வகையானவர்களின் பெற்றோரைத்தான் நோகாமல் நொங்கெடுப்பவர்கள் வகைக்குள் அடக்குகிறோம்.

> **வீதியில் சற்று வெள்ளையும் சுள்ளையுமாக ஒரு பிள்ளை போகிறதென வையுங்கள். பையன்கள் என்ன பேசிக் கொள்வார்கள். 'அதை விடு மச்சி. அது கட்டாயம் வெளிநாட்டு பார்சலாகத்தான் இருக்கும்'.**

இந்த வெளிநாட்டு பார்சல் கலாசாரத்தால் 'வாழ்க்கை சமநிலை' குலைகிறதென சமூக வலைத்தளங்களில் மூக்கால் அழுகிறார்கள் பையன்கள். இதுவே சற்று விவகார எரிச்சலாகி 'காதலிக்க நாங்கள். கல்யாணம் செய்ய அவர்கள்' என்பது மாதிரியான ஏடாகூட வசனங்களையும் உருவாக்கியுள்ளது.

வீதியில் சற்று வெள்ளையும் சுள்ளையுமாக ஒரு பிள்ளை போகிறதென வையுங்கள். பையன்கள் என்ன பேசிக் கொள்வார்கள். 'அதை விடு மச்சி. அது கட்டாயம் வெளிநாட்டு பார்சலாகத்தான் இருக்கும்'.

'பல பெண்களிற்கு வாழ்க்கையென்பது ஒரு எண்டர்ரெயின்ற்மென்ற்' என்பது பையன்களின் ஏகோபித்த குற்றச்சாட்டு. டீன்ஏஜ் பருவத்தில் ஊரில் யாரையாவது காதலிப்பார்கள். பையனும் காதலுக்காக தாஜ்மகால் கட்டுவான். இந்த சமயத்தில்த்தான் மன்சூர் அலிகான் மாதிரி பெண் பிள்ளையின் அப்பன் சம்பவத்திற்குள் நுழைவான். நாலு புரோக்கரை பிடித்து ஒரு வெளிநாட்டு சம்பந்தம் பார்ப்பான். பிள்ளை நாலுநாள் பக்கத்திலுள்ள அழகு நிலையம் சென்று தலைமுடியை ஸ்ரைட் செய்யும். மாறுவேசம் மாதிரி ஒரு மேக்அப் போடும். நல்ல ஸ்ரூடியோவில் படம்பிடித்து வெளிநாட்டுக்கு அனுப்ப, பார்சல் ரெடி.

அதிலும் கொஞ்சம் கண்ணுக்கு இலட்சமான பெண் பிள்ளையென்றால் அப்பன் உழைக்காமலேயே வீட்டில் படுத்திருப்பான். எப்படியுமொரு கனடாக்காரனோ, லண்டன்காரனோ சிக்குவான் என்ற அசராத நம்பிக்கை.

கொஞ்சம் கண்ணுக்கு இலட்சணமானவர்கள் எல்லாம் வெளிநாட்டு பார்சல் என்றால் நமது கதியென்னவென்பதுதான் சமூக வலைத்தளங்களில் அழும் பையன்களின் ஒரே 'ஜனநாயகரீதியான கோரிக்கை'.

'இந்தப்பெண்களின் மனம் கோணக்கூடாதென்பதற்காக சைட் அடிக்கும் போதும் அவர்களிற்கு வலிக்காமல் அடிக்கிறோம். ஆனால் குடும்பத்தின் பொருளாதாரத்திற்காக வயதானவர்களிற்கும் கழுத்துநீட்ட துணிகிறார்களே இவர்கள்' என சென்ரிமென்ற் கடை விரிப்பவர்களும் உள்ளனர்.

புலப்பெயர்வு நமது வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள் விரிவான அலசலிற்குரியவை. புலம்பெயர் மாப்பிள்ளைகளிற்கு பெண்களை அனுப்புவது தொடர்பில் அண்மைக்காலத்தில் சமூக வலைத்தளங்களில் பையன்கள் பகிரங்கமாக அழுவதற்கு முன்னர் யாரும் அக்கறை காட்டியதாக தெரியவில்லை. சமூகத்தில் இந்த விவகாரம் என்ன விதமான தாக்கத்தை உண்டு பண்ணும் என்பது பற்றிய விரிவான அலசல் அவசியம்.

அப்படியான விஞ்ஞானபூர்வ ஆய்வில் ஏதாவது சிக்குகிறதோ இல்லையோ, பெண்பிள்ளைகளை வெளிநாட்டு பார்சலாக்கி நோகாமல் நொங்கு குடிக்கும் பெற்றோர்களே... வெர்ஜின் பையன்கள் சாபம் உங்களை சும்மா விடாது!





யாழ் நகரத்தை அழகாக்கும் திட்டத்தின் ஒரு அங்கமாக வீரசிங்கம் மண்டபத்திற்கு அண்மையில் தனியார் பேரூந்து நிலையம் அமைப்பதற்காக உலகவங்கி அதிகாரிகள் அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.


## சிறு விளம்பரங்கள் ~~2000/=~~ 1000/=

### வாடகைக்கு

திருமண மற்றும் ஏனைய வைபவங்களுக்கும், சுற்றுலாவுக்கும் கார் மற்றும் வேன் வாடகைக்குப் பெற்றிட...

GLOBAL RENT A CAR

021 221 7424
077 071 2317

### பார்சல் சேவை

வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு நீங்கள் விரும்பும் பொருட்களை நாங்கள் நேரடியாக உங்கள் இல்லத்திற்கு வருகை தந்து குறைந்த செலவில் அனுப்பி வைப்போம்...

தொடர்புகளுக்கு 0773828594

### தேவை

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு அறை ஒன்று தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு 0774166369

### சிறுநீரகம் தேவை

34 வயதுடைய ஆண் ஒருவருக்கு O(+) ve சிறுநீரகம் உடனடியாக தேவைப்படுகிறது.

நன்கொடையாக வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0772431310
0212225876

உங்களுடைய சிறு விளம்பரங்களை குறைந்த தொகையில் தீபத்தில் பிரசுரம் செய்ய...

தொடர்புகளுக்கு :- 0774166369



திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி



# அழகின் இரகசியம் 2

அழகு குறைதலோ தலைமுடி பொலிவிழந்தாலோ, வயதாகு முன் சீக்கிரமே தலைமுடி நரைத்து விட்டாலோ, தன்னம்பிக்கை போய் விடும். நம்மை நாமே அழகுபடுத்திக் கொள்வதன் மூலமும் சிற்சில குறைகளைத் திருத்துவதன் மூலமும் தன்னம்பிக்கையை, அழகினை அதிகரித்துக் கொள்ளலாம்.

தலைமுடியின் ஆரோக்கியத்திற்கு நாம் உண்ணும் உணவு முறையும் ஒரு காரணம். இன்றைய இளம் தலைமுறையினருக்கு உணவு விஷயத்தில் அக்கறையே இல்லை. ஆரோக்கியமான தலைமுடியைப் பெற ஆரோக்கியமாக எடுத்து கொள்வது முக்கியம்.

எண்ணெய் கொழுப்பு மிகுந்த உணவுப் பதார்த்தங்களைத் தவிருங்கள். காய்கறி, பழங்கள், மற்றும் கீரை வகைகளைத் தினமும் உணவில் அதிகமாகச் சேருங்கள். வாரம் ஒரு முறை ஹெட் ஒயில் மசாஜ் செய்து கூந்தலை அலசுங்கள்.

மேலே உள்ள முடியை மட்டும் அலசுவதால் எந்தப் பயனுமில்லை. வாரம் இரு முறையாவது இயற்கைப் பொருட்கள் கலந்த பொடி அல்லது மூலிகை கலந்த ஷம்பூ உபயோகிக்க வேண்டும். அப்படி உபயோகிக்கும் போது மயிர்க்கால்களில் உள்ள அழுக்குப் போகும்படி முடியை நன்கு அலச வேண்டும்.

தலைக்கு குளித்தவுடன் சுத்தமான துவாயால் இதைத் துடைக்க வேண்டும். அவசரத்திற்கு அடிக்கடி ஹேர் டிரையர் உபயோகப் படுத்தினால் முடி பலவீனமடைந்து கொட்ட ஆரம்பிக்கும். எனவே கூடுமானவரை ஹேர் டிரையர் உபயோகிப்பதை தவிருங்கள். அதுவும் வறண்ட கூந்தல் உடையவர்கள் கண்டிப்பாக ஹேர் டிரையர் உபயோகிக்கக் கூடாது.

எப்பொழுதும் தலைமுடியைக் காய்ந்த பிறகே வார வேண்டும். ஈரத்தோடு தலை வாரினால் பலமிழந்த முடிகள் கையோடு வந்து விடும்.

கூடுமானவரை சீப்பு, சோப், டவளை தனியாக உபயோகியுங்கள். மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் ஹெல்மெட் போட்டால் முடி கொட்டுகிறது என்று நினைப்பவர்கள் அதற்கு தலையில் ஒரு மெலிதான துணி அல்லது ஸ்காஃப் போட்டு அதன் மேல் ஹெல்மெட் அணியலாம்.

முடி குட்டையாக இருந்தால் 4 டீஸ்பூன் விட்டமின் ஈ எண்ணெய் முதல் நாள் இரவு தலை முடியில் தடவி அடுத்த நாள் காலை அலசுங்கள்.

## பேன் தொல்லை

சுத்தமான தலையில் கூட பேன் உற்பத்தியாகும் பேன் இருப்பவர்கள் அருகில் மற்றவர்கள் படுத்தால் பரவும் பேன் பொடுகு உள்ளவர்கள் உபயோகிக்கும் சீப்பு டவளை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.

## தீர்வு

வேப்பிலை பொடி ஒரு டிஸ்பூன்
துளசி ஒர டிஸ்பூன்
முல்தானி மெட்டி இரண்டு டிஸ் பூன்

இவற்றை நீருடன் கலந்து தலையில் வேர்க் கால்களில் படும்படி தேய்க்கவும். அரைமணி நேரம் ஊற வைத்து வெதுப்பான நீரில் தலையை அலசவும்.

சிறிதளவு தண்ணீரில் 5 டிஸ்பூன் வேப்பிலைப் பொடியை போட்டுக் கொதிக்க விடவும். அதைத் தலையில் தேய்த்துக் குளித்தால் பேன் ஈறு தொல்லைகள் நீங்கும்.

## பிசு பிசுப்பு முடி

எண்ணெய் சுரப்பிகள் அதிகமாக வேலை செய்வதால் முடியின் அடியில் அவை படிந்து துவாரங்கள் அடைபடுகின்றன. இதனால் பக்டீரியா உருவாகின்றது. அமுக்கம் சேர்ந்து கொள்கின்றது.

## தீர்வு

வேப்பிலைச்சாறு ஒரு ஸ்பூன்
தண்ணீர் 8 ஸ்பூன்


இதைக் கலக்கவும் பஞ்சில் இதைத் தொட்டு தலையில் தேய்த்து அரைமணி நேரம் ஊறிய பிறகு குளித்தால் பிசுபிசுப்பு நீங்கும். பொடுகு தலையில் இருந்தாலும் போய்விடும்.

## சொர சொரப்பான முடி

தலை முடிக்கு சரியான ஊட்டச் சத்து கிடைக்கவில்லையென்றால் முடி சொரசொரப்பாக இருக்கும்.

## தீர்வு

காய்ந்த நெல்லிக்காய், வெந்தயம் இவற்றை தலா இரண்டு ஸ்பூன் எடுத்துக் கொள்ளவும். வெந்நீரில் இவற்றை முதல் நாள் இரவே ஊற வைக்கவும். மறுநாள் காலையில் அரைக்கவும். தலைமுடியில் லேசாக எண்ணெய் தடவி விட்டு அரைத்த கலவையைப் பூசவும். இருபது நிமிடங்கள் கழித்து தலைமுடியை அலசவும். தொடரும்...



# குட்டிக் குட்டி சமையல் டிப்ஸ்

- வெண்டிக்காயை அதன் வளுவளுப்புத் தன்மை கருதி பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை. ஆனால், அதன் தன்மையை மாற்ற முடியும். வெண்டிக்காயை கொதித்த எண்ணெய்யில் பொரித்தெடுத்து பின்னர் அதில் குழம்பு தயாரிக்க வேண்டும். வெண்டிக்காய் பால்க்கறி வைக்கும் போது அதனுள் சிறு பப்பாசித்துண்டை வெட்டிப்போட்டு சமைத்தால் அதன் வழுவழுப்புத் தன்மை இல்லாமல் போவதுடன் கறியும் சுவையாக இருக்கும்.
- தக்காளிப் பழத்தையும், வெந்தயத்தையும் எப்போதும் ஒன்றாக வதக்கக் கூடாது.
- குளிர் காலத்தில் தயிர் சீக்கிரம் உறைவதற்கு, கை பொறுக்கும் சூடான பாலில் 1 தேக்கரண்டி கெட்டியான மோர் சேர்த்து நன்கு ஆற்றி ஒரு பாத்திரத்தால் கவிழ்த்து மூடி வைத்தால் 4 மணிநேரத்தில் சுவையான கெட்டி தயிர் ரெடியாகும்.
- பீட்ருட் வறை செய்யும் போது அதனுடன் ஒரு கேரட் நறுக்கி சேர்த்தால் விரைவாக வெந்துவிடும்.
- கீரை, வெண்டிக்காய், வேக விடும்போது, பாத்திரத்தை சிறிது திறந்து வைத்தால் காயின் பசுமை நிறம் மாறாமல் இருக்கும்.
- இட்டலி மிஞ்சினால் கவலை வேண்டாம். நறுக்கிய செத்தல் மிளகாய் அல்லத பச்சை மிளகாய், வெங்காயம், (விரும்பினால், கரட், உருளைக்கிழங்கு, பயிற்றங்காய் ஏதேனும்) என்பவற்றுடன், கறிவேப்பிலையும் கடுகும் சேர்த்து வதக்கியபின், அதில் இட்லியை பொடிப் பொடியாக உதிர்த்தி போட்டு கிண்டினால் சுவையான உப்புமா தயார்.
- பற்றீஸ், றோல், கட்லைட் போன்ற சிற்றுண்டிக்கான உள்ளீடு(கறி) தயாரிக்கும்போது தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக தண்ணீர் ஊற்றி தயாரித்தால் விரைவில் பழுதடையாமல் இருக்கும்.
- பாயாசத்திற்கு திராட்சைக்கு பதிலாக பேரிச்சம் பழத்தை பொடியாக நறுக்கி வைத்து நெய்யில் பொரித்து போட்டால் சுவையாக இருக்கும். சேமியா பாயாசம் செய்யும்போது குழைந்து போய்விட்டால் இரண்டு சொட்டு எலுமிச்சை சாறு அதில் சேர்த்தால் சேமியா தனித்தனியாகிவிடும்.
- சக்கரைப் பொங்கல் செய்யும்போது அரை கப் தேங்காய் பால் ஊற்றிக் கிளறி இறக்கினால், பொங்கல் மிகவும் சுவையாக இருக்கும்.
- தேங்காய்த் துருவல் மீதியானால், அதை லேசாக வதக்கி சிறிது உப்பு சேர்த்து வைத்தால் மறுநாள் சமையலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- கரட்டின் தலைபகுதியை சிறிது நறுக்கி விட்டு காற்று புகாத பொலித்தீன் பைகளில் போட்டு வைத்தால் சில நாட்களுக்கு கரட் பசுமையாக உலராமல் இருக்கும்.
- பச்சை மிளகாயின் காம்பினைக் கிள்ளிவிட்டு காற்றுப்புகாத பொலித்தீன் பைகளில் போட்டு வைத்தால் நீண்ட நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும்.
- கேக் முட்டை வாடையடிக்கிறதா? கவலையை விடுங்கள். கேக் தயாரிப்பதற்கான கலவை தயாரிக்கும் போது ஒரு மேசைக்கரடி தேன் சேர்த்துக்கொள்ளுங்கள் முட்டை வாடை போய்விடும்.
- ஜாடியில் ஊறுகாயைப் போடும் முன் கொதிக்கும் எண்ணெயில் நனைக்கப்பட்ட துணியால் ஜாடியின் உட்புறத்தை துடைத்த பின் ஊறுகாயைப் போட்டு மூடி வைத்தால் பூசனம் பிடிக்காமல் இருக்கும்.
- உளுந்து வடை செய்யும் போது மாவுடன் வேகவைத்த உருளைக்கிழங்கை மசித்து கலந்து வடை செய்தால், வடை எண்ணெய் குடிக்காமல் மொறு மொறுவென்று ருசியாக இருக்கும்.
- தோசை செய்யும் போது இரண்டு மேசைகக்ரண்டி கடலை மாவு சேர்த்து செய்தால் தோசை நன்கு சிவந்து மொறு மொறுவென்றிருக்கும்.
- வாழைக்காய் மற்றும் வாழைப்பூ நறுக்கும் போது கைகளில் பிசுபிசுவென ஒட்டாமலிருக்க கைகளில் உப்பு அல்லது தேங்காய் எண்ணெய் தடவிக்கொண்டு நறுக்கவேண்டும்.
- உருளைக்கிழங்கு வேகவைக்கும் போது அவை வெந்ததும் வெடிக்காமல் இருக்க சிறிது உப்பையும் சேர்த்து வேக வைக்கவேண்டும். இதனால் உருளைக்கிழங்கு வெடிக்காமல் நல்ல பதத்துடன் இருக்கும்.
- தக்காளியின் தோல் நீக்க தக்காளியின் மேல்பக்கமும் கீழ்ப்பக்கமும் கத்தியால் சிறிது கீறிவிட்டு 10 நொடிகள் சுடுநீரில் போட்டு எடுத்தால் தோல் சுலபமாகக் கழன்றுவிடும்.
- கூடையில் வைத்திருக்கும் உருளைக்கிழங்கு முளை விடாமல் இருக்க, கூடவே, கூடையில் ஒரு ஆப்பிள் பழத்தையும் போட்டு வையுங்கள்
- அலுமினிய குக்கரில் சமைக்கும் போது அடியில் கால் மூடி எலுமிச்சம் சாறு போட்டால் குக்கர், கறுப்படையாமல் "பளிச்"என்று இருக்கும்.

# கருப்பை கழுத்து புற்றுநோயும், சுக வனிதையர் சிகிச்சை நிலையமும்



வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்

இலங்கையில் மிக அதிகமாக பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் ஒன்றாக கருப்பை கழுத்து புற்றுநோய் விளங்குகிறது. பொதுவாக இப் புற்றுநோய் சிகிச்சை அளிக்க முடியாமல், நோய் முற்றிய நிலையிலேயே இனங் காணப்படுகிறது. இந்நோய் ஆரம்ப நிலையில் இனங்காணப்பட்டால் வெற்றிகரமாக சிகிச்சைமூலம் குணப்படுத்த முடியும்.

கருப்பை கழுத்துப் புற்றுநோயானது கருப்பை கழுத்தின் புறத்து வாரத்தின் அயற்பகுதியிலேயே ஆரம்பமாகிறது. மேற்படையில் கலங்கள் அசாதாரணமாக பிரிகையடைய தொடங்குவது ஆரம்பத்தில் நிகழும் நிகழ்வாகும். இவ்வாறு அசாதரணமாக பிரிகையடையும் கலங்கள் புற்றுநோய் கலங்கள் அல்ல. எனினும் அவை பின்னர் புற்றுநோய்க் கலங்களாக மாற்றமடைய கூடும்.

கருப்பை கழுத்தின் மேற்பரப்பு படையில் அசாதாரண நிலை உருவாகுமாயின் இந்நிலை வெளியே எந்த அறிகுறியும் அற்ற நிலையில் 5 தொடக்கம் 15 வருடங்கள் வரை இருக்ககூடும். இவ்வாறு அசாதாரணமான நிலை புற்று நோய்க்கு முந்தைய நிலை (Precancerous stage) எனப்படும்.

515 வருடங்கள் கடந்த பின் கருப்பையை சூழவுள்ள பகுதிகளிலும் அதற்கப்பாலும் மிக விரைவாகப் பரவி செல்கின்றது. இவ்வாறான ஒரு நோய் முற்றிய நிலையில் வெளியே அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கின்றன. இவ்வாறான நிலையில் புற்றுநோய் இனங்காணப்படுமிடத்து முற்றாக குணப்படுத்துவது கடினமாகும். இதனால் மரணிக்கும் நிலைக்கு பெண்கள் ஆளாகின்றனர்.

எனினும் இவ்வாறான நிலையை தடுப்பதற்காக புற்றுநோய்க்கு முந்திய நிலையில் (Precancerous stage) அசாதாரண நிலையை இனங்காண்பதற்காக கிடைத்த வரப்பிரசாதமே pap smear எனப்படும், கருப்பை கழுத்துப் பாய பூச்சு பரிசோதனையாகும். இப் பரிசோதனை மூலம் இவ்வாறான சாதாரண நிலையை இனங்காண முடியும்.


இதனைக் கருத்திற் கொண்டு தேசிய மட்டத்தில் சுக வனிதையர் சிகிச்சை நிலையத்தினூடாக ஒரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம், இலங்கையின் நோயியல் வைத்தியர் சங்கம், இலங்கைப் பெண் நோயியல் வைத்தியர் சங்கம், ஆய்வு கூட சேவைகள் ஆகிய தேசிய இணைப்பாக்கத்தின் கூட்டு ஆலோசனைப்படி கருப்பைக் கழுத்து பாய பூச்சி பரிசோதனையை ஒவ்வொரு 35 வயதை அடைந்த பெண்களுக்கும் பரிசோதித்தல் ஆகும்.

இந் நிலையில் உங்களுக்குள் அசாதாரண நோய் நிலையை உடைய பெண்கள்யாவரும் புற்று நோய்க்கு ஆளாகின்றனரா? என்கின்ற வினா எழக் கூடும். உண்மையில், கணிசமான பெண்களுக்கு அசாதாரண நிலை இருப்பினும் அவை புற்று நோயாக மாற்றம் அடைவது இல்லை. அவை சிகிச்சை இன்றியே மீண்டும் சாதாரண நிலைக்கு வருகின்றன. எனினும், வைத்தியர்களினால் இந்த அசாதாரண நிலை உடைய பெண்களிற்கு புற்று நோய் வரும் என்றோ, இல்லை வராது என்றோ கூற முடியாது. எனவே 35 வயதடைந்த பெண்கள் யாவரையும் பரிசோதித்து அவர்களுக்கு அசாதாரண நிலை இனங் காணப்படுமிடத்து தொடர் பரிசோதனைகளுக்கும் விசேட பரிசோதனைகளுக்கும் விசேட நிபுணர்களிடம் அனுப்பி வைக்கப் படுகின்றனர். விசேட நிபுணர்கள் தொடர் பரிசோதனை செய்து அவை புற்றுநோயாக மாறும் சந்தர்ப்பங்கள் உருவாகுமாயின் சிகிச்சை அளிக்க சிபாரிசு செய்வர்.

ஒருவர் கருப்பை கழுத்து பாய பரிசோதனையை வெளியே செய்ய பல ஆயிரங்களை செலவு செய்ய வேண்டிவரும். ஆனால், நீங்கள் சுக வனிதையர் சிகிச்சை நிலையம் ஊடாக எதுவித கட்டண அறவீடும் இன்றி இலவசமாகச் செய்து கொள்ள முடியும்.



உங்கள் குடும்ப நல உத்தியோகத்தரின் ஊடாக (mid wife) உங்களை பதிவு செய்வதன் மூலம் இப் பரிசோதனையை உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியூடாக செய்து கொள்ள முடியும். அது மட்டுமல்லாது உங்கள் ஏனைய தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் (குருதி அமுக்கம், நீரிழிவு, குருதி குளுக்கோசளவு, உடற்திணிவுச் சுட்டி, வாய்ப் புற்றுநோய், மற்றும் சுகாதார பரிசோதனை) போன்றவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே 35 வயதை அடைந்த பெண்கள் அனைவரும் உங்கள் பகுதி குடும்பநல உத்தியோகத்தரை அணுகி இப் பரிசோதனையை செய்வதன் மூலம் கருப்பை கழுத்து புற்றுநோய் ஆபத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.



---

# இப்ப இது ஸ்ரைல்

பெண்களின் ஆடையுலகத்தை போன்ற பரபரப்பான ஒன்று வேறு கிடையாது. அவ்வளவு விரைவில் ஸ்ரைல்கள் மாறிக் கொண்டிருக்கும். பெண்களின் எதிர்பார்ப்பிற்கு தீனிபோடும் விதமாக விதவிதமான ஸ்ரைல்கள் உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கிறது.

கொஞ்சநாள் கலர் கலராக பஞ்சாபி. அதுவும் யானைக்கால் முக்கால் கை தான் கொஞ்ச நாட்கள் எல்லாப் பெண்களின் ஸ்ரைலும். இப்போது முக்கால் சட்டைதான் நெற் மற்றும் வெல்வெட்களில் கலர் கலாராக வெலிற் வைத்து கடைகளில் தொங்குகின்றது.

இப்படி பலவித டிசைன்களில் தொங்கும் சட்டைகளை பெண்கள் ஆர்வத்துடன் வாங்கி விடுகிறார்கள். ஆனால் எல்லாமே எல்லோருக்கும் பொருத்தமாக இருக்காது. சிலருக்கு நாடகத்தில் வேடம் போட்டதைப் போலவும் இருக்கும்.

நமது உடல்வாகு எப்படியென்பதை தெரிந்து, அதற்கு தக்கதாக ஆடைகளை தேர்வு செய்வது ஒரு கலை. அந்த இரகசியத்தை இப்பொழுது சொல்லப் போகிறோம்.

இளம் பெண் பிள்ளைகள் தமது உடல் தோற்றம் என்னவென்பதை சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். மெல்லிய பெண்களாக இருப்பின் கை இல்லாத நெற் வகையிலான முக்கால் சட்டைகள் பொருத்தமானதாகும். நீங்கள் குண்டான தோற்றம் உடையவராயின் உங்களுக்கு இந்த சட்டைகள் பொருத்த மற்றவை. எனவே இதனை நீங்கள் விட்டு விடுவதே சிறந்தது. இந்த சட்டையை அணிய வேண்டுமென விரும்பினால், இதில் வெல்வெற் துணியில் வரும் சட்டைகள் தான் உங்களுக்கு கொஞ்சம் பொருத்தமானது.



அதேபோல் தொப்பை உடைய பெண்களுக்கும் இந்த சட்டை பொருத்தமற்றது. நிச்சயம் தவிர்த்து விடுங்கள்.

திருமணமாகாத பெண்களிற்கும், 30 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்குமே இந்தசட்டை பொருத்தமானது. மற்றவர்கள் இதனை போடும் பொழுது அவர்களுடைய ஆளுமை, மதிப்பு என்பது சமூகத்தில் குறைந்து விடுகின்றது. எனவே திருமணமானவர்கள் ஆடைகளை தெரிவு செய்யும்போது, 'எமது விருப்பம். நாம் போடுவோம'; என்ற பிடிவாதத்தை விட்டு விடுவதே சிறந்தது. இளம் பெண்களுக்கும் தொப்பை இல்லாத பெண்களுக்கும் தான் இந்த சட்டை அழகை கூட்டும். மற்றவர்களுக்கு உள்ள அழகையும் குறைத்து விடும். எனவே இப்ப நம்ம சமூகத்தில் ஸ்ரைலாக இருக்கும் இந்த சட்டையை நமது உடலையும் கருத்தில் கொண்டு தெரிவு செய்வோம்.

# தண்ணீருக்கு வெளியில் வந்த முதலைகள்

அன்ரூ இக்னேஷ்

உள்ளூர் ரௌடியாக இருந்த இந்திய அணியின் உண்மையான பலம் என்னவென்பதை அவுஸ்திரேலியர்கள் உலகத்திற்கு காண்பித்துள்ளனர். ஒரு முழுமையான கிரிக்கெட் அணியாக இந்தியா பரிணமிப்பதற்கு இன்னும் நிறைய காலம் தேவையென்ற நிலையில், அண்மையில் உள்ளூரில் 'ஈட்டப்பட்ட வெற்றி'களின் அபத்தத்தையும் அவுஸ்திரேலியர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

நடந்துவரும் ஒருநாள் தொடரை இந்தியா மிகமோசமாக இழந்துள்ளது. அத்தனையும் மரணஅடிகள். இந்தியர்கள் நிர்ணயித்த பெரிய இலக்குகளை வெகு சாதாரணமாக சேஸ் செய்து முதல் மூன்று வெற்றிகளையும் பெற்று தொடரை வென்றது அவுஸ்திரேலியா.

அன்னிய ஆடுகளங்களில் அணிகள் தோற்பதும், தொடரை இழப்பதும் ஒன்றும் புதிய விடயமல்ல. அதுவே வீழ்ச்சியின் அறிகுறியுமல்ல. ஆனால் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் வாங்கிய உதை விரிவாக பேசப்பட வேண்டியது. ஏனெனில் நல்ல கிரிக்கெட்டிற்கு உதவாத சில 'குறுக்கு வெற்றி'களை ஈட்டி ஆசுவாசம் தேடுவது அணிக்கு எந்தவிதத்திலும் உதவாதென்பதையும், நேர்வழி வெற்றிகளின் அவசியத்தை உணர்த்தவும் இதுபற்றி விரிவாக பேச வேண்டும்.

மூத்தவீரர்களின் ஓய்வு, நல்ல பந்துவீச்சாளர்கள் அடையாளம் காணப்படாமை, கிரிக்கெட்டை அதிகமும் பணச்சந்தையாக்கியமை உள்ளிட்ட பல காரணங்களினால் இந்திய கிரிக்கெட் அணி அண்மைக் காலமாக திணறி வந்தது. இந்தக் காலப்பகுதியில் இலங்கை விஜயத்தில் பெற்ற வெற்றிதான் குறிப்பிடப்பட வேண்டியது. ஆனாலும் அந்த வெற்றி இந்தியாவின் பலத்தினால் ஈட்டப்பட்டதல்ல. இலங்கையின் பலவீனத்தால் பெறப்பட்ட வெற்றி.

இந்திய அணியின் தடுமாற்றங்களை தொடர்ந்து ரவி சாஸ்திரி அணியின் இணைக்கப்பட்டிருந்தார். தோல்விக்கு ஒரு காரணமும், பரிகாரமும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைக்கு தேவையாக இருந்தது. தோல்விக்கான காரணம் அணியில் தேடப்படாமல் பயிற்சியாளரில் தேடப்பட்டது. ரவி சாஸ்திரியின் மூலம் அவசரமான வெற்றியொன்றும் அவர்களிற்கு தேவையாகஇருந்தது. அப்படித்தான் தென்னாபிக்காவுடனான தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது.

முற்றிலும் ஒரு தலைப்பட்சமான, மகாமோசமான ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு அந்த தொடர் நடந்தது. எதிர்பார்த்தது போல இந்தியா வென்றது. அப்படியான ஆடுகளங்களிற்காக ஐ.சி.சி எச்சரிக்கையும் விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இப்படியான ஆடுகளங்களின் துணையுடன் இந்தியா சில வெற்றிகளை பெற்றது. இந்திய ஊடகங்களும் தமது நாட்டு வீரர்களை கொண்டாடி சுயதிருப்தியடைந்தன.

மோசமான ஆடுகளங்களின் துணையுடன் இந்தியா சில வெற்றிகளை பெற்றபோதே முக்கிய விடயமொன்றை குறிப்பிட்டிருந்தோம். இந்த வெற்றிகள் இந்திய கட்டுப்பாட்டு வாரியத்திற்கும், அணிக்கும் தற்காலிக ஆறுதலை கொடுக்கலாமே தவிர, இந்திய கிரிக்கெட்டிற்குஎதனையும்பெற்றுக் கொடுக்காது. மாறாக சொந்தநாட்டு சொத்தை ஆடுகளங்களிற்கு வெளியில் செல்லும்போது, நீரைவிட்டு வெளியில் செல்லும் முதலையைப் போன்ற ஆபத்தைத்தான் இந்திய அணி சந்திக்குமென கூறியிருந்தோம். இப்பொழுது அதுதான் நடந்திருக்கிறது..

தற்காலிக ஆறுதலொன்றிற்காக செய்த காரியம் இந்தியாவை கசப்பான யதார்த்தத்தை சந்திக்க வைத்துள்ளது.

வெற்றிக்கு தேவையான ஆடுகளங்களை அமைக்காமல், கிரிக்கெட்டிற்கு தேவையான ஆடுகளங்களை அமைத்து விளையாடியிருந்தால் வீரர்களின் அணுகுமுறையிலும் மாற்றம் இருந்திருக்கும். வீரர்களிடம் சீரான மாற்றத்திற்கு வாய்ப்பிருந்திருக்கும். இந்தியா வெற்றிகளை சுவைத்த விதம், நன்றாக விளையாடினால் மட்டுமே வெற்றிபெறலாம் என்ற கட்டாயத்தை வீரர்களிடம் ஏற்படுத்தாது. மாறாக 'ஊருக்கு வா. வைச்சுக்கிறன்' பாணி மனநிலையைத்தான் ஏற்படுத்தும்.

போராடினால்த்தான் வெற்றி பெறலாமென்ற அவசியம் இல்லாவிட்டாலே அணியாக அவர்கள் தோல்வியடைய ஆரம்பிக்கிறார்கள். இந்தியாவிற்கும் அதுதான் நடக்கிறது.

அவுஸ்திரேலியாவில் ஆரம்ப போட்டிகளில் துடுப்பாட்டத்தில் கன ஜோராக ஆடியிருந்தார்கள். ஆனால் அணியாக அனைத்து துறைகளிலும் அவர்களால் ஜொலிக்க முடியவில்லை. குறிப்பாக பந்து வீச்சாளர்களால். இந்திய பந்து வீச்சில் ஒன்றுமேயில்லையென்றுதான் ஆனது. முதல் போட்டியில் மட்டும் ஸரண் ஓரளவு வீசினார். மற்றும்படி பந்துவீச்சில் ஒன்றுமிருக்கவில்லை. சாதக ஆடுகளத்தில் வீசிப்பழக்கிய அணியால், வேறொரு ஆடுகளத்தில் சிறிய போராட்டத்தை தன்னும் வெளிப்படுத்த முடியவில்லை. குறிப்பாக அஸ்வின். அவரால் எதிரணிக்கு சாதாரண சவாலைக்கூட அளிக்க முடியவில்லை.

சமகாலத்தின் தலைசிறந்த சுழல்பந்துவீச்சாளராக அவரை கருத முடியாதென்பதற்கு அவுஸ்திரேலிய தொடர் நல்ல உதாரணம். இந்தியாவில் 'அமைக்கப்பட்ட' ஆடுகளங்கள் அவரை நம்பர் 1 டெஸ்ட் பந்துவீச்சாளராக்கியது. தற்போது அவருக்கு கிடைத்த பெருமை நியாயமானதல்ல. அஸ்வின் திறமையே இல்லாத மட்டரக பந்துவீச்சாளரென கூறவில்லை. ஆனால் அவர் நம்பர் 1 வீரரல்ல. அந்த ஸ்தானம் இந்திய கிரிக்கெட் வாரியம் பெற்றுக் கொடுத்தது.

ஒரு தலைசிறந்த பந்துவீச்சாளரால் அந்நிய மைதானங்களில் சிறிதளவு தாக்கத்தை கூட செலுத்த முடியாமல் போகுமா? யதார்த்தமென்னவென்றால் மூன்றாவது போட்டியில் அணிக்குள் சேர்க்கப்படாமல் வெளியில் உட்கார வைக்கப்பட்டிருந்தார். முரளிதரன் அவுஸ்திரேலிய, இங்கிலாந்து ஆடுகளங்களிலும் ஆதிக்கம் செலுத்தினார் என்பதை குறிப்பிட வேண்டும்.

சாதக ஆடுகளங்களில் ஆடிப் பழகியதால் அணித்தேர்விலும் தோனி நிறைய தடுமாறினார். இறுதிப் பதினொருவர் அணியில் யாரை இணைப்பதென்பதில் இது வரை இந்தியாவிற்கு தெளிவான முடிவில்லை. பல மாதங்களிற்கு மேலாக 5,6ம் இலக்கவீரர்கள் யார் என்ற குழப்பம் நீடிக்கிறது. நம்பர் 1 அணியில் நீண்டகாலத்திற்கு இப்படியான குழப்பங்கள் இருக்குமா? அல்லது அந்த வரிசையில் பொருத்தமான வீரர் இல்லாமல் ஒரு அணி நம்பர் 1 ஆகுமா?

டெஸ்ட் தர வரிசையில் இந்திய முதலாம் இடம் பிடித்ததும் ஒரு விசித்திர கதைதான். இந்தியா உட்கார்ந்திருந்த இடத்திலேயே இருந்தது. முன்னாலிருந்த அணிகள் தான் கீழே சரிந்து கொட்டுப் பட்டுள்ளன. ஏற்கனவே இந்திய முதலாமிடத்தை பிடித்தபோதும் இந்த கதைதான் நடந்தது.

தண்ணீர் முதலைகள் ஒரு காலமும் நம்பர் வன் அணியாக மாற முடியாது. ஒரு பருவம் பொய்த்தபோது தென்னாபிரிக்காவிற்கு அதுதான் நடந்துள்ளது. ஒரு பருவம் வாய்த்து நம்பர் 1 அணியான இந்தியா, நீண்டநாள் அந்த ஸ்தானத்தை தக்க வைத்திருக்காது.







# குறைந்த செலவில் அதிக இலாபம் தரும் கடற்பாசி

மிலன்
vasee125@gmail.com

"கடற்பாசி" என்றதும் பலர் சர்வசாதாரணமாக நினைக்கலாம். ஆனால், ஆடைகளுக்கு போடப்படும் சாயம், சொக்லேட், ஐஸ்கிரீம், பற்பசை, வாசனை திரவியங்கள் மற்றும் புற்றுநோய், சக்கரைநோய், மூட்டு வலி, காசநோய் என்பவற்றுக்கான மருந்து வகைகள் உட்பட 240க்கும் மேற்பட்ட உற்பத்திகள் இந்த கடற்பாசியில் இருந்து தயாரிக்கப் படுகின்றனவாம். அதுமட்டுமல்ல, இப் பாசிகளில் அதிகமான புரதச்சத்தும், விரைவில் ஜீரணம் ஆகக்கூடிய தன்மையும், தாய்பாலில் மட்டுமே இருக்கின்ற கொழுப்பு அமிலமும் காணப்படுகின்றமை இயற்கை நமக்களித்த மற்றுமொரு வரப்பிரசாதம்.

இவ்வாறு பல்வேறு பயன்களை அள்ளி வழங்கும் கடற்பாசியை உற்பத்தி செய்வதன் மூலம் வெளிநாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் ஏராளமானோர் மிகக் குறைந்த செலவில் அதிக இலபாம் ஈட்டி வருகின்றனர்.

1960ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கடற்பாசி வளர்ப்பு முறை, ஏனைய நாடுகளிலும் அறிமுகமாகி, 2013ஆண்டிலிருந்து நம்நாட்டிலும்; பெருமளவில் அறிமுகமாகியுள்ளது.

இதற்கான விதைகளை "ஹேலீஸ் அக்ரிகல்ச்சர்" நிறுவனம் பிலிப் பைன்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, கடல்தொழில் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட கடல் பகுதிகளைச் சேர்;ந்த கடல் தொழிலாளர்களுக்கு வழங்கி வருவதுடன், பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படும் பாசிகளை பச்சையாகவும், காய்ந்த நிலையிலும் அவ் நிறுவனமே கொள்வனவும் செய்து வருகின்றது.

வடமாகாணத்தில்பூநகரிவலைப் பாடு, நையினாதீவு, ஈரணைமாநகர், பல்லிக்குடா போன்ற கடற் பிரதேசங்களில் பண்ணைகள் அமைத்து அதிகளவில் பயிரிடப் படும் இப் பாசி வளர்ப்பின் மூலம் அதிகளவில் வருமானம் ஈட்டிக்கொள்வதாக் பண்ணை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### 45 நாட்களில் 75,000 ரூபா வருமானம்

"பொழுதுபோக்காக கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டேன். ஆனால், அதில் அதிகளவில் இலாபம் கிடைப்பதால் இன்று 20 பேரை வேலைக்கமர்த்தி பெரியளவில் பண்ணை அமைத்த பயிரிட்டு வருகிறேன்." என்கிறார், பூநகரி வலைப்பாட்டு பிரதேசத்தைச் சேர்ந்தவரும், கடல் பாசி வளர்ப்பில முதன்முதலில் ஈடுபட்ட பாஸ்கரன்.

"ஹேலீஸ்" நிறுவனத்தால் கடல் பாசி வளர்ப்பு அறிமுகப்படுத்தப் பட்டதாகவும், முதன் முதல் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட போது 45 நாட்களில் 50 ரேப்(12500கிலோ) பாசியினை விளைச்சலாக பெற்று 75,000 ரூபாவினை வருமானமாக பெற்றதாகவும் கூறிய அவர், இதன் இலாபம் கருதி பலர் தற்போது இந்த பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள் ளதாகவும் குறிப்பிட்டார்.

கடற்பாசி வளர்ப்புக்கான விதைப் பாசியையும், ஊக்கத்தையும் வழங்கும் ஹேலீஸ் நிறுவனமே, உற்பத்தியாகும் பாசியை பண்ணை யாளர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றதாம்.(அறுவடை செய்யப் பட்ட பாசியை பச்சை பாசியாகவும் விற்பனை செய்ய முடியும்.)

### இடத் தெரிவு அவசியம்

பாசி வளர்ப்பதற்கான இடத்தை தெரிசெய்வது மிகவும் அவசியம். அவை வளரும் சூழலுக்கேற்ற இடத்தை தெரிவுசெய்து வளர்க்கும் போது சிறந்த பயனை பெறமுடியும். ஆறு, கடல் சேரும் இடம் மற்றும் மிக அதிகமாக அலைகள் மோதும் இடத்தை தவிர்த்து, தண்ணீரின் இயக்கம் சீராக உள்ள கடற்தாவரங்கள் அற்ற சுத்தமான பகுதியை தெரிவுசெய்ய வேண்டும்.



கடற்பாசி வளர்ப்புக்கான விதைப் பாசியையும், ஊக்கத்தையும் வழங்கும் ஹேலீஸ் நிறுவனமே, உற்பத்தியாகும் பாசியை பண்ணை யாளர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றதாம்.

குறைந்தது 3அடிக்கு குறையாத நீரில் மிதவை அமைத்து பயிரிடு வதன் மூலம் அதிக விளைச்சளை பெறகூடியதுடன் அதிக வருமானத் தையும் ஈட்ட முடியும்.

### பயிரிடும் முறை

கடல்பாசியானது கடலில்மூன்று விதமாக பயிரிடப்படுகின்றது.

1. 13X3 அடி நீளமான மூங்கில் கட்டைகள் மூலம் சதுர வடிவில் கூடுகள் அமைத்து, ஒவ்வொரு அடியாகப் பிரித்து கயிற்றினை கட்டி, அந்த கயிற்றின் மேற்பகுதியில் பாசி யினை மிதக்க விட வேண்டும். ஒரு கூட்டில் சாதாரணமாக 45நாட்களில் 10ரேப் (2500கிலோ) சாதாரணமாக பயிரிட முடியும்.
2. தடிகள் மூலம் ஒரே நேரில் மிதவைகள் அமைத்து அதில் விதைப்பாசிகளை பயிரிடும் முறை இதுவாகும். இதற்கு குறைந்தது 6அடிக்கு அதிகமான தண்ணீர் தேவைப்படும். இதன் மூலம் அதிக வருமானத்தை ஈட்ட முடியும்.
3. 6அடி ஆழமான நீர்ப்பரப்பில் தடிகள் ஊன்றி, முக்கால்(3/4) மீற்றர் இடைவெளியில் கயிற் றால் பிணைக்கப்பட்டு வெற்று பிளாஸரிக் போத்தல்கள் மூலம் மிதவை அமைத்து, அதில் விதை பாசிகள் பயிரிடப்படுவது மற்றுமொரு முறையாகும்.

பயிரிடும் முறை ஆகும். தற்போது இலங்கையில் இம்முறை யிலேயே அதிகளவில் கடல் பாசி பயிரிடப்படுகின்றதாம்.

### பராமரிப்பு

திடீரென ஏற்படும் காலநிலை மாற்றம், தண்ணீரில் உப்புத்தன்மை அதிகரித்தல், கடற்பாசி நோய் தாக்குதலுக்கு உள்ளாதல் போன்ற காரணிகளால் பாசியின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். எனவே, முறையான கவனிப்பும் பராமரிப்பும் அவசியம்.

பாசி பயிரிடப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பதிப்புகள் உள்ளதா என்று பார்க்க வேண்டும். உடைந்து காணப்படும் கடற்பாசி துண்டுகளையும் அதன் அருகில் வளரும் களைகளையும் அகற்ற வேண்டும்.

### அறுவடை

கடற்பாசிகள் மிக வேகமாக வளரக்கூடியவை என்பதால், 45 முதல் 60நாட்களில் அவற்றை அறுவடை செய்யலாம். நிலையான வரிசை முறையில் கயிறுகளை முழுவதுமாக எடுத்து, அதிலிருந்து வளர்ச்சியடைந்த கடற்பாசிகளை அறுவடை செய்யலாம். பின்பு கடற்பாசியில் ஒட்டியிருக்கும் தேவையற்ற களைகள், கல்கள், சிப்பிகள் போன்றவற்றை அகற்றிய பின்னர் வெயிலில் உலர வைக்கவேண்டும். காய வைக்கும் இடங்களில் விலங்குகள், பறவைகளை அனுமதிக்க கூடாது. கடற்பாசி நன்றாக உலர்ந்த உடன் அவற்றை சாக்குகளில் மூட்டையாக கட்டி உலர்ந்த, சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும்.(10கிலோ பச்சை பாசி உலர்ந்த பின்னர் 01கிலோ நிறையைப் பெறும்). பின்னர், விற்பனைக்கு அனுப்பலாம்.

இதேவேளை, வடமாகாண கடற்தொழில் அமைச்சும், மத்திய கடற்தொழில் அமைச்சும் பயிர் செய்கைக்கான ஊக்கத்தையும், உதவிகளையும் வழங்குமாயின் கடற்பாசி வளர்ப்பு இலங்கையில் முக்கிய இடம்பிடிக்கும் என கடற்பாசிச் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.








# வலசைப் பறவைகள்
## அவற்றின் பயணத்தில் எதிர்நோக்கும்
# சவால்களும் ஆபத்துக்களும்...



கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com

வடமுனைவில் இருந்து மத்திய கோடு அல்லது தென்னரைக் கோளத்திற்கு வந்து சேரும் பயணத்தில் வலசைப்பறவைகள் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், அவ்வாறான ஆபத்துக்கள் தொடர்பில் பறவையியலாளருக்கும், ஆய்வாளருக்கும் கிடைத்த ஆதாரங்கள் பற்றிய குறிப்புக்கள் இந்த பகுதியில் இடம்பெறுகின்றன. அனேக விடயங்கள் இலங்கைக்கு வந்து போகும் ஆசிய குடிபெயர்ப் பறவைகள் பாதையில் பெறப்பட்ட அனுபவங்கள் மற்றும் ஆதாரங்களாக இருக்கும். தேவை ஏற்படும் பட்சத்தில் ஏனைய குடிபெயர் பறவைகள் பாதைகள் சம்பந்தப்பட்ட தகவல்களும் இங்கு தரப்படும்.

### மலை, மலையேறிகள், குடிபெயர்ப் பறவைகள்

ஆசிய குடிபெயர்ப் பறவைகள் பாதை என்பது வட ஐரோப்பிய மற்றும் வட ஆசிய நாடுகளில் இருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு பறவைகள் வந்து போகும் பாதைகளைக் குறிக்கும். இங்கு குறுக்கான உயரமான மலைத்தொடர் மற்றும் பீடபூமியாக இருப்பது இமய மலையும் திபெத் பீடபூமியும் ஆகும். பண்டைய இலக்கியங்களும், பறவைகளும் பற்றி நான் விளங்கியிருந்த போது எந்தவிதமான முன்னேற்றகரமான தொழில்நுட்பமும் இல்லாத காலத்திலேயே காளிதாசரும் ஏனைய சங்ககால புலவர்களும் சைபீரிய நாரைகள், இமயமலைக் கணவாய்களைக் கடந்து தென் இந்திய வேடந்தாங்கலுக்கு வந்து போவதைப்பற்றி கூறியிருக்கின்றார்கள் என்று ஆச்சரியத்துடன் நான் கூறியிருக்கின்றேன்.

இமயமலை, மலையேறிகளில் பலர் குடிபெயர் பறவைகளின் எலும்பு எச்சங்களைக் கண்டு அறிக்கைப்படுத்தி உள்ளனர். இவ்வாறான ஆதாரங்கள் காரணமாக இந்தப் பறவைகள் கடல் மட்டத்தில் இருந்து அந்த உச்ச உயரத்தில் கூட (700 மீற்றருக்கு மேல்) பறந்து இருக்கின்றன என்பதற்கு சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன. சாதாரணமாக சாதாரண காலநிலை மற்றும் ஏனைய நிபந்தனைகளில் அந்த அளவு உயரத்தில் அவை பறப்பது இல்லை. அவற்றின் உண்மையான பாதைகள் அந்த அளவு உயரத்தில் இருப்பதும் இல்லை. அவை சாதாரணமாக இமயமலையையோ, திபெத் பீடபூமியையோ கடக்கும் போது கடல் மட்டத்திலிருந்து மிக உயரம் குறைந்த பள்ளத்தாக்குகள் மற்றும் கணவாய்களையே தமது பாதைகளாகப் பாவிக்கின்றன. ஆனால் அவை தமது பயணத்தை தமது இனப்பெருக்க வாழிடங்களில் இருந்து தொடங்கிய பின்னர் சடுதியாக ஏற்படும் புயல், வளிமண்டல அமுக்க மற்றும் வேறுபாடு ஆகியன காரணமாகவே அவை தமது வழமையான பாதையை மாற்றி உயர் மலை உச்சிகளின் மேலாகப் பறந்து வருகின்றன. மலையேறிகள் ஒரு கணவாயை கடப்பது பற்றிய ஒரு படம் தரப்பட்டுள்ளது. அந்தக் கணவாயின் ஊடாக பறவைகள் இமயமலையைக் கடக்கின்றன.

### விமானம், விமானமோட்டிகள், குடிபெயர்பறவைகள்

எமது குடிபெயர் பறவைகள் பற்றியும் அவற்றின் பாதைகள், குறிப்பாக அவை பயணிக்கும் உயரம் பற்றியும் முக்கியமான தகவல் தருபவர்களாக விமானிகளும், அவர்கள் பயணம் செய்யும் விமானங்களும் அமைந்துள்ளன. பறவைகளையும் விமானத்தையும் காட்டும் படம் இங்கு தரப்பட்டுள்ளது. குடிபெயர் பறவைகள் ஆய்வில் முன்னிலையில் நிற்கும் அமெரிக்கா மற்றும் கனடாவில் தொழில்சார் விமான ஓட்டிகளுக்கு பறவைகள் அடையாளம் காணல் மற்றும் தொடர்புடைய வேறு அம்சங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

அதன் விளைவாக அவர்கள் பயணிக்கும் விமானங்கள் தமது உயர் பயணத்தில் பறவைகளையோ, பறவைக்கூட்டங்களையோ கண்டால் அல்லது தமது விமானத்தில் பறவைகள், பறவைக்கூட்டங்கள் மோதினால் அந்தப் பறவைகளின் இன அடையாளம், பண்புகள், அந்தச் சம்பவம் நடந்த உயரம் ஆகியன பதியப்பட்டு குடிபெயர் பறவைகள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளும் செயற்பாட்டின் மத்திய தரவுத் தளத்துக்கு அந்தத் தரவுகள் அனுப்பப்படும். கடந்த 50 வருடங்களில் இந்த முறைப்படி பல அரிய தகவல்கள் பறவையியலாளருக்குக் கிடைத்துள்ளது. ஆனால் இலங்கையில் விமான ஓட்டிகளுக்கு குடிபெயர் ஆய்வுகளுக்கு தரவு தரக்கூடிய மைக்கு தகவல்களைத் தரக்கூடிய அளவுக்கு விமானிகளுக்கு பயிற்சி வழங்கும் முறைமை இல்லை. எனினும் இலங்கையில் கடந்த அரசாங்கக் காலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்தள விமானநிலையம் அமைந்துள்ள இடம் இலங்கையின் மிக முக்கிய சரணாலயங்களான யால மற்றும் குமணவின் எல்லைப்புறத்தில் அமைந்திருக்கின்றது. இது சம்பந்தமாக அந்தக் கட்டுமானப்பணி நடந்த நேரம் சுற்றுச்சூழலியலாளர்களும், பறவையியலாளர்களும் பல எதிர்ப்புக்களைத் தெரிவித்த போதும் சாட்டுக்கு ஒரு ஆய்வு குழுவை நியமித்து அதன் அறிக்கையை தாங்கள் விரும்பியவாறு பெற்று சட்ட ரீதியான அங்கீகாரத்தை இலங்கைக்கும், உலகிற்கும் காட்டுவதற்கேற்ற விதத்தில் பெற்றுக் கொண்டதன் ஊடாகவே அங்கு விமான நிலையம் அமைத்து முடிக்கப்பட்டது. பறவைகளுக்கு அதிர்ஷ்டமோ என்னவோ தெரியாது நெரிசல் மிக்க விமான நிலையம் என்ற நிலையில் அந்த விமான நிலையம் இல்லாதபடியால் யாலவிலும், குமணவிலும் பறவைகள் வந்து போகின்றன.

### காற்றாடிகள், காற்றாலைகள் பறவைகள்

வட பகுதிக்கான புகையிரதத்தில் ஆனையிறவில் இருந்து பளை நோக்கிப் பயணிக்கும் போது பாரிய காற்றாலைகள் பல புகையிரதத்திற்கு தெற்குத்திசையில் தமது பெரிய விசிறிகளைச் சுற்றிக் கொண்டு செயற்படுகின்றமையை அவதானிக்கலாம். எமது பிரதேசத்திற்கு இது புதிய விடயமாக இருந்தாலும் பல நாடுகளில் இவ்வாறான காற்றாலைகள் மின்சார உற்பத்தி உட்பட்ட வெவ்வேறு நோக்கங்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பறவைகள் அவற்றின் காலம் காலமான பாதைகளில் (குடிபெயர் பறவைகளின் பாதைகள் என்று அடையாளப்படுத்தப்பட்டவற்றில்) இவ்வாறான பாரிய காற்றாலைகள் நிர்மாணிக்கப்பட்டால் அவை பறவைகளில் குடிபெயர்தலைப் பாதிக்கின்றன. பறவைகள் நேரடியாக அந்த விசிறிகளில் மோதி விபத்துக்கு உள்ளாகின்றன. அதே வேளை அந்தக் காற்றாலைத் தொகுதி மிகமிக வேகமாகத் தொழிற்படும் போது அதில் ஏற்படும் அமுக்க மாற்றங்கள் இதற்கு அண்மைய பறவைகளின் பறப்பைப் பாதிக்கும். இது சிலவேளை பறவைகளை அவற்றின் உண்மையான வாழிடத்தை அடைவதனைத் தடுக்குமாயின் அந்தப் பறவை அல்லது பறவைக் கூட்டம் அழிவடையும்.

### கலங்கரை விளக்கம், இரவுஒளி, குடிபெயர் பறவைகள்

பறவைகளின் குடிபெயர்வு கூர்ப்படைந்தது உண்மையான இருட்டு, இரவு உள்ள பூமியில் மில்லியன் கணக்கான வருடங்களான ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும். அப்போது கடற்கரையோரங்களில் காணப்படும் கலங்கரை விளக்கம் மற்றும் ஏனைய பிரகாசமான ஒளிமுதல்கள் காணப்படவில்லை. இப்போது அவை பறவைகளை திசைதிருப்பக் கூடியன. பறவைகள் திசையறிதல் மற்றும் நிலையறிதல், சூரியன், சந்திரன் மற்றும் உடுத் தொகுதி செல்வாக்கு செலுத்துவது பற்றி முன்னர் விளக்கியிருந்தேன். சில குடிபெயர் பறவைகள் பருத்தித்துறை கலங்கரை விளக்கம் செயற்பட்ட காலத்தில் அதனை நோக்கி வந்த குடிபெயர்ப் பறவைகள் சில, அவற்றில் மோதி இறந்துள்ளன. அவற்றின் உடலை எடுத்திருந்த வயது முதிர்ந்த மீனவர்களை இந்தக் கட்டுரையாளர் சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.





(அடுத்த வாரமும் வலசைப் பறவைகள் பறக்கும்)

# கட்டுமானத்துறையின் ராஜா 'ஹரி இன்ஜினியரிங்'



இன்று யாழ்ப்பாணத்தின் திரும்பிய திசையெல்லாம் 'ஹரி என்ஜினியர்ஸ்' என்ற விளம்பரத்தை காணலாம். சிறியவீடுகளிலிருந்து பெரியவீடுகள் வரை அத்தனையையும் வில்லங்கமின்றி கட்க்கொடுக்கும் 'ஹரி என்ஜினியர்ஸ் குறுகிய காலத்திலேயே வடக்கின் கட்டிட நிர்மாணத் துறையில் முத்திரை பதித்து விட்டனர். இந்த வெற்றியின் பின்னால் இருப்பவர் சோமசுந்தரம் யாதவன்.

சோமசுந்தரம் யாதவனின் வெற்றி இரகசியங்களை பகிர்ந்து கொள்ள அண்மையில் யாதவனிடமே சென்றோம். 'எங்கள் பணம். எங்களிடமே இருக்க வேண்டும்;' என்ற எண்ணத்திலேயே நிறுவனத்தை ஆரம்பித்ததாக கூறினார்.

'நான் யாழ்ப்பாணம் அல்வாயில் பிறந்தேன். அதே ஊரில் தான் நிறுவனமும் வைத்து நடத்திக் கொண்டிருக்கின்றேன். எனது பெற்றோர் அரசாங்க உத்தியோகத்தர்கள்.ஆனால்எனக்கு சிறு வயது தொடக்கம் சொந்தத் தொழில் செய்யவேண்டும் என்ற கனவு இருந்தது. ஆனால் என்ன தொழில் செய்யப்போகின்றோம்? என்ன தொழில் செய்வது? என்பதுதான் புரியாமல் இருந்தது.

முதலில்;யாழ் பல்கலைகழகத்தில் பௌதீகவியல் பட்டப்படிப்பினை மேற்கொண்டேன். அதனை முடித்த பின்பு கொழும்புக்குச் சென்று கணிம அளவையியலில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு நிறைவுசெய்தேன்.

எனது அப்பா சாத்திரங்களில் ஈடுபாடு உடையவர். ஏழு வயதில் இருந்து எனது கையைப் பார்த்து 'இது சம்பளம் வாங்கிற கை இல்லை. சம்பளம் கொடுக்கின்ற கை' என்று அடிக்கடி சொல்லுவார். அவர் அப்போது சொன்னது இப்போது பலித்திருக்கின்றது' என சிரிக்கிறார் யாதவன்.

'கொழும்பில் கணிம அளவையிலை படித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் எனது சொந்த ஊரில் சொந்தத் தொழிலை 2010 ஆம் ஆண்டு முதல் முதலில் உருவாக்கினேன். அவ்வாறு உருவாக்கின்றபோது பல தடங்களுக்கு பின்னே சாதிக்க முடிந்தது. நான் சொந்த தொழிலை தொடங்கி நான்கு மாதம் காத்திருந்த பின்பு தான் முதலாவது செயற்திட்டம்; கிடைத்தது. அதனை குறித்த காலத்துக்குள்ளும் நல்ல தரமான கட்டிடமாகவும் கட்டிமுடித்தோம். எனது இந்த கட்டிட நிர்மாணத துறைக்கு ஒரு மைக் கல்லாக ஹாட்லி கல்லூரி மாணவர் விடுதி கட்டுவதற்கான செயற்திட்டம் எமக்கு கிடைத்தது எமது கட்டிட துறையின் வரலாற்றுத் திருப்புமுனையாக அது அமைந்தது. அந்த செயற்திட்டத்தை ஜெர்மனில் இருக்கும் தொழிலதிபரும் ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவருமான இயன் கரன் அவர்கள் ஹாட்லி கல்லூரியின் 33 மில்லியன் அளவிலான செயற்திட்டத்தை தந்தார். அவர் அதனை தருகின்றபோது சொன்ன வார்த்தை 'உங்களுக்கு நான் விசிட்டிங் காட் தரப்போவதில்லை. இந்த செயற்திட்டம்தான் விசிட்டிங் காட். ஐந்து மாத காலப்பகுதிக்குள் இந்த செயற்திட்டத்தை முடித்துத் தரவேண்டும். அவ்வாறு முடித்துத் தந்தால் தொடர்ச்சியாக உங்களுக்கு செயற்திட்டங்களைத் தருவோம்' என்று கூறினார். நாங்கள் அதற்;கமைவாக நான்கு மாதம் பத்தொன்பது நாளில் வெற்றிகரமாக அந்த செயற்திட்டத்தை முடித்துக் கொடுத்தோம்.

அந்த செயற்திட்டத்தை முடித்துக் கொடுத்த பின்பு எமக்கு எண்ணிலடங்காத செயற்திட்டங்கள் கிடைத்தது மட்டுமல்லாமல் எங்களுடைய நிறுவனத்தின் பெயர் வெளிநாடு வரை செல்லத்தொடங்கி விட்டது.

இந்த நிறுவனத்தை ஆரம்பிக்கின்ற போது சமுகத்திற்கு பெரும் வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் தான் தொடங்கினேன். எனது எண்ணத்தில் ஓரளவான பங்கு நிறைவேறியுள்ளது. நாம் பணம் ஒருவருக்கு பணம் கொடுத்து உதவுவதை விட அவர்களுக்கு தொழில் வாய்ப்பினை கொடுத்து உதவுவதன் மூலம் எமது சமூகத்தின் கட்டமைப்பினையும் எமது சமுக்தின் பொருளாதார விழுமியங்களையும் , கலாச்சார பண்பாடுகளையும் பேணலாம் என நான் நம்புகின்றேன். அது தான் நான் இந்த சமுகத்திற்கு செய்யக்கூடிய சேவை.

அடுத்த கட்டமாக யாழ் மாவட்டம் முழுவதுமாக பல செயற்திட்டங்களை நாம் மேற்கொள்ளப் போகின்றோம். அவ்வாறு தொடங்குவதனால் கட்டித்துறையில் தகுதியுள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க கூடியதாக இருக்கும்' .என்றார்.

எங்கள் நிறுவனம் வளர்ந்த நிறுவனம் இல்லை. வளர்ந்து வரும் நிறுவனம். நாம் இன்னும் பல வளர்ச்சிகளை காண்போம். அதற்குரிய திறமைகள் எம்மிடம் இருக்கின்றது. என்று நம்பிக்கையுடன் கூறுகின்றார் யாதவன்.






மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை மத்தி தும்பு பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 22 பெண்களிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் அண்மையில் பட்டிப்பொங்கல் நடந்தது. அன்றையதினம் பட்டிக்காரர் கௌரவிப்பு, பாரம்பரிய நடனம் என்பவற்றுடன் பாரம்பரிய உழவர் பொலிப்பாடலும் பாடப்பட்டது.







இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 24.01.2016 அன்று வெளியிடப்பட்டது